REGISTERED No. M. 6165. அணா. 2

578

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

5-78
1-54
1954
MADRAS

மாத பத்திரிகை

மார்ச்சு 1954

| விஷயம். | பக்கம். |
|---|---|
| மனிதனைப் படைத்ததின் நோக்கம் | |
| (நச்சந்தீவு, முஹம்மது அப்துல் காதிர் ஆலிம்) | 1 |
| மானிட வாழ்க்கையும் மார்க்கமும் | 3 |
| நாம் அடையும் பெரும் பலன் | |
| (கும்மிடிபூண்டி பி. டி. ஷாஹுல் ஹமீத்) | 5 |
| கலைஞர்கள் கவனத்திற்கு | |
| (வேளாங்கண்ணி கவிஞர் சாந்திதாஸன்) | 7 |
| மதீனாவின் பிரதம நீதி மன்றத்திலே | |
| (மௌலவி பி. ஏ. கலீலுர் ரஹ்மான் ஸாஹிப்) | 9 |
| மாயமாய் மறைந்த மங்கை (தொடர் கதை) | 13 |
| [illegible] தத்ஹர் அவ்லியா சரித்திரச் சுருக்கம் | |
| ([illegible] பேட்டை எஸ். அப்துல் ரஜாக் சாஹிப்) | 25 |

[illegible] இஸ்லாம் ஆபீஸ் :
[illegible]. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதறாஸ் 5.

JL
211, N124 F1
M54
187628

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| | வருஷ சந்தா | ரூ. 1-8-0 |
| | தனிப் பிரதி | அணா. 2 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | | ரூ. 2-0-0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.


மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.



## இரத்தினவிலாசம்

## நஸீஹத்துலாசம்

அல்லாஹ் ரஸூலைக்கொண்டு ஈமான்கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் படித்தறிந்து அமல் செய்ய வேண்டிய அருமையான நூல் இது. பிரபல இஸ்லாமிய அரபு கிரந்தங்களாகிய கஜானத்துல் அஸ்ரார், ஷிர்ஹத்துல் இஸ்லாம், ஈத்துல் முக்தார், துர்ரத்துன் நாஸிஹின் முதலிய கிதாபுகளிலிருந்து திரட்டி யெடுத் தெழுதப்பட்ட அருமையான நஸீஹத்துகளும், மஸ்அலாக்களும், ஹதீதுகளும், ஹிக்காயத்துகளும் நிறைந்த நூல் இது. ஒவ்வொருத்தருடைய கையிலும் இருந்து தீரவேண்டிய புத்தகம். தமிழ் முஸ்லிம்களுக்கு இன்றியமையாத நூல். இதன் அருமை நேரில் பார்த்தால் தெரியவரும்.

சுத்த தமிழ் ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:-

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்.

மார்ச்சு—1954.

REGISTRAR OF BOOKS
27 FEB 1954

## மனிதனைப் படைத்ததின் நோக்கம்.

(ஈச்சந்தீவு, முஹம்மதப்துல் காதிர் ஆலிம்.)

எப்புகழும் எவ்வித துதியும் நமது வல்ல நாயனுக்கு உரித்தாகும். கருணை என்னும் சாந்தியும் (ஸலாமும்) எமது இறுதி நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும் சஹாக்கள் துயர்ந்தோர்கள் மீதும் உண்டாவதாக.

நமது அன்பின் பெரிய வல்ல நாயன் இவ்வுலகத்தில் படைத்த படைப்புகளில் மனிதன் என்கிற பற்பல உருவமான உறுப்புகள் யாவற்றையும் சிருஷ்ட்டித்து படைத்திருக்கின்றான். அவ்விதம் படைத்தது, இவ்வுலகில் பராக்காக்கிக் கொண்டு இருப்பதற்கும் அவனது சுகண்டியிலே முங்கி யிருப்பதற்கும் இறைவன் சிருஷ்ட்டிக்கவில்லை.

சிருஷ்டித்ததற்கு முகாந்திரம், அந்த இறைவனை வணங்குவதற்குத் தான். நமது சகோதரர்களின் பெரும்பாலோருக்கு இறைவன் என்கிற சிருஷ்டித்த நாயனையே தெரியாது. அவர்கள் எவ்விதம் தாயின் கெற்பக்குவளறையில் தரித்திருந்தார்கள் என்பதையும்அறியாது இவ்வுலகில் அவரவர்களின் சீமான் தனம் என்கிற மேலெண்ணத்திலும் உத்தியோகம் என்கிற ஹோதாவிலும் சிலர் தம்மை, இவ்வித அழகான உருவமாகச் சிருஷ்டித்த நாயனையே மறந்து விடுகின்றார்கள். இவ்வுலகம் அற்பமான வாழ்க்கை, மறுவுலகம் ஊழி காலம் தரிபட்டிருக்கும் படியான வாழ்க்கை என்பதையும் எமது சோதரர்கள் கருதுகின்றார்கள் அல்ல. இறைவனே வேதத்தில் கூறுகின்றான்: மனித வர்க்கத்தையும், ஜின் வர்க்கத்தையும் என்னை வணங்கவே ஒழிய, படைக்கவில்லை என்று, திருமறையின் மூலம் அறிவித்துள்ளான்.

நாங்கள் நமது இறைவனை, என்றும் ஞாபகம்செய்வதை மறக்காதும் அவன் எங்களைப் படைத்ததின் நோக்கத்தை மறக்காதும், நாளொன்

றுக்கு ஐந்து வேளை அல்லாவுக்குத் தொழுகிறதாக என்றும், நிலை பாடாக்குவோமாக.

பாருங்கள் சோரீர், 1370 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதர்கள் ஆடு, மாடு, ஒட்டகம், இவ்வித மிருகஜாதிகளின் கோலத்தி லிருந்தார்கள். இன்றைக்கு நாகரீகம் என்கிற நரகரீகத்தில் மூங்கி யிருக்கின்றோம். அவ்விதம் இருந்து தான் சிருஷ்டித்த நாயனை மறந்து விடுகின்றோம். "ஓய் மனிதனே, உனது சங்கை வாழனுகிய றப்பை விட்டும் உன்னை எது வஸ்து மாட்டி விட்டது?" என்று திருமறையில் இயம்பியுள்ளான். இவ்வித மெல்லாம் நமக்கு அறிவித்துத் தந்திருந்தும் நாம் நமது கல்பு என்னும் இருதயத்தைக் கொண்டு உணர்வதில்லை. நாம் நமது இருதயத்தைக் கொண்டு, இறைவனின் அற்புதச் செயல்களை நோட்டமிட்டு, இறைவனையும் அவன் தூதரையும் மறக்காது, அவர்கள் ஏவிய கருமங்களைச் செய்வதற்கு முயற்சிப்பதுடன் விலக்கிய கருமங்களை விட்டும் தூரப்படுவோமாக. நமது நாட்டம் என்கிறதை, இறைவன் பக்கந் திருப்பி, நமது உயிர் பொருள் ஆவி அனைத்தையும் தத்தம் செய்து, அவனிடத்திலேயே உதவி தேடுவோமாக.

அல்லாஹுத்தஆலா அவனது, முத்தகீன்களில் நின்றும் நம்மையும் ஆக்குவானாக. (ஆமீன்)

---


## மஜ்மூஉ மவ்லூது

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும் அதன் துவாக்களும், அதன் வரிசைகளும், மீறான் ஸாஹிபு ஆண்டவர்கள் மௌலூதும், அதன் துவாக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி. யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழை பைத்து, பீஹுப்பி ஸையிதினு பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் யெழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை அணு. 15

கிடைக்குமிடம்:-

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# மானிட வாழ்க்கையும் மார்க்கமும்.

(டி. எல். எம் சனூன், முருத்தலாவ, சிலோன்)

மனித வாழ்க்கை என்பது மென்மலர் தூவிய பஞ்சணை அன்று; எவ்வளவோ ஏமாற்றங்களும் துன்பங்களும் நிறைந்த கொடிய காட்டு வழி. அது அந்தத் துன்பங்களில் சிக்குப்பட்டு முன்னேறிச்செல்லும் வழியும் வகையும் புரியாமல் மனங்கலங்கிக் கிடக்கும்போது இன்பமாக வாழும் மக்களைக் கண்டு பொறாமை கொண்டு அவர்களுக்குத் தீங்கு விளைவிக்க வேண்டுமென ஆத்திரம் தோன்றலாம். இல்லாதவர் உள்ள வரைக்கண்டு அழுக்காற்றால் இயற்றும் கொடுமைகூட அரசியல் புரட்சி என்று பாராட்டித் தட்டிக்கொடுக்கும் போலி அறிஞர்களையும் இவ் வுலகில் பார்க்கலாம். ஆனால் அறவலி நடக்கும் பெரியோர்கள் கொடுஞ் செயல்களை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள்.

தான் அடியோடு அழிந்து போவதாயினும் அதைத் தவிர்க்கும் பொருட்டு நல்லோர்க்கும் தீங்கு செய்ய நினைத்தல் கூடாது. வறுமை யின் கொடுமைக்காற்றாது உடம்பில் உள்ள இரத்தமெல்லாம் சுண்டி தசைகளெல்லாம் சுருங்கி உயிர்நீங்கிக் கொண்டிருக்கும் தறுவாயிலும் கூட தகுதியற்றவர் முன்வந்து உதவும் உணவை ஏற்றுக்கொள்ளல் தகாது. பரந்த இவ்வுலகம் முழுமைக்கும் தனியரசாக விளங்கும் பெரும் சிறப்பு கிடைப்பதாயினும் பொய்யும் மெய்யும் கலந்து புணைந் துரைகளைப் பேசுதல் ஆகாது. பல அறிய நூல்களை வருந்திப்பயின்ற தனால் ஏற்படும் தெளிந்த அறிவினையுடைய பெரியோர்கள் தமக்கு தாளமுடியாத துன்பங்கள் நேர்ந்த காலத்திலும் அறநூல்களால் ஒதுக் கப்பட்ட தீய காரியங்களைச் செய்யமாட்டார்கள்.

மேலும் இவ்வுலகத்தில் மனித உள்ளத்தை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு அழக்களிக்கும் கொடியபேராசை மூன்று. அவை, மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை. அவைகளில் பெண் ணாசை மற்ற ஆசைகளைப்போல் அல்லாமல் உடலும் உணர்வும் ஒழுங்கே சேர்ந்து கொடுமைப்படுத்தும். இவ்வாசைக்கு மாற்றாக ஏற் பட்டதே முறைபிறழாத மணவாழ்க்கை. வயிற்றுப்பாட்டை அமைதி யாக நடத்தும் பொருட்டு ஒரு தொழிலை மேற்கொள்வதே போல் தசையின் வேற்கை தணிக்கும் பொருட்டு மனதிற்கிசைந்த மங்கை ஒருத்தியை மணம் புரிந்து வாழ்தலே அறநெறியாகும். ஒரு தொழி லும் செய்யாமல் சோம்பித்திரிந்து பிச்சை எடுத்து அல்லது பிறதீய வழிகளில் பொருளைச் சேர்த்தோ, வாழ்க்கை நடத்த விரும்பும் எத்தர் களைப்போல், "மண" வாழ்வின் பொருப்புக்குப் பயந்தோ அல்லது அதன் சிறப்பை மறந்தோ மணையறம் நாடாமல் காதற் பிச்சைக்கு

187028

கண்ணோக்கித்திரியும் கயவர்களும் உண்டு. மணமானபின்னும் மகளிராசை தணியாது பிறமாதர்மேல் மனத்தை செலுத்தி சமுதாயத்தின் அமைதியான வாழ்வை குலைத்து அவதியைப் பெருக்கும் ஆடவர்கள் கொள்ளைக்காரர்களை விடக் கொடியவர்களே. நல்ல நாள் பார்த்து நல்ல நேரம்பார்த்து அந்நாளில் அந்நேரத்தில் உலகமறிய கொட்டு மேளங்களுடன் விளாச் செய்து மணமுடித்த அன்பு நிறைந்த மனைவி அகத்தில் தனக்காக வழிமேல் விழிவைத்து எதிர் பார்த்து இருக்க, ஒருவன் மாற்றான் மனைவியின்பால் மனத்தை செலுத்தி கருத்த முந்திக் கிடக்கிறான் என்றால் அவன் மதியீனத்தை என்னவென்று சொல்வது! தனக்குரிமை யில்லாத பிறன் மனையில் வாழும் பெண்ணை தீய நினைவோடு மனத்தாலும் எண்ணி மகிழாமல் வாழ்தலே பேராண்மை என்று போற்றப்படும். பிறன்மனை நயவாத பெருந்தகைமை பண்பட்ட உள்ளம் வாய்ந்த நல்லோரிடம் அறமாகவும்சிரிய ஒழுக்கமாகவும் காணப்படும். வாழ்வின் நிலையாமையை சொல்லளவில் மட்டுமின்றி கருத்தளவிலும் நன்குணர்ந்து வீணான ஆசைகளை மனதில் அண்டவிடாமல் விரட்டியடித்து அறநெறி வழுவாது வாழும் மாந்தரே வாழ்வில் வெற்றியடைவர்; மற்றவர்கள் கண்ணியில் சிக்கிய பறவைபோல் வாழ்க்கை சிக்கலிற் அகப்பட்டு அவதியுறுவார்கள்.

வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்பதற்காக உள்ள சட்டதிட்டங்களை கொண்டதுதான் மார்க்கம். ஒரு மானிடன் இப்பூ உலகில் பிறந்தது முதல் இறப்பது வரை அவன் எவ்வித வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதற்குரிய சட்டதிட்டங்களைத்தான் பரிசுத்த “தீனுல் இஸ்லாம்” என்னும் மார்க்கம் வகுத்துக் கொடுத்திருக்கிறது. இஸ்லாம் தனது கொள்கைகளை பின்பற்றும்படி பிறரைக்கட்டாயப் படுத்துவதில்லை, அதேபோல் இதரர்களின் தலையீட்டையும் வற்புறுத்தலையும் இஸ்லாம் சகிக்கவோ அனுமதிக்கவோ போவதில்லை. நம் பரிசுத்த தீனுல் இஸ்லாம் மனித குலம் முழுவதையும் ஒரே இனமாகத் தான் கருதுகிறது, சர்வ தேசியத்தினரும் சகோதரர்கள் என்றே இஸ்லாம் போதிக்கிறது. இலங்கை முஸ்லிம்களாயினும் இந்தியா முஸ்லிம்களாயினும் அல்லது ஆப்ரிகா மூஸ்லிம்களாயினும் அவர்கள் இஸ்லாமிய அடிப்படையின் சகோதரர்களே. ஆகவே சகோதரர்கள் என்ற முறையில் உலக முஸ்லிம்கள் அனைவரும் மனித இன நலனுக்காகவும் நமது இஸ்லாம் மார்க்கத்தின் நலனுக்கும் செயலாற்ற கடமைப்பட்டவர்கள். முஸ்லீம்களை பணியவைப்பதற்காக எத்தனையோ உபாயங்களும் தந்திரங்களும் கையாளப்பட்டன. அவற்றின் ஒன்றுதான் தேசியவாதம். இந்த தேசிய வாதம் என்ற கருவியால் இஸ்லாமிய சகோதரர்களிடையே பிளவை ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகின்றது, ஆனால் இதற்குப் பின்னுவது தெளிவுடைய அறிவாளர்கள் இந்த சூழ்ச்சியில் சிக்க மாட்டார்களென எதிர்பார்க்கின்றேன்.

# நாம் அடையும் பெரும் பலன்.

கும்மிடிபூண்டி B. D. ஷாஹுல் ஹமீத்

மகிமை பொருந்திய மானிடர்களாகிய நாம் எதற்காக வாழ்கிறோம், இதற்கு முன்னும் எதற்காக வாழ்ந்தோம், இனியும் எதற்காக வாழ முயற்சிக்கிறோம்? எல்லாம் நம் சுகத்திற்காகத்தானே.

எல்லாம் நம் நன்மைக்காகத்தானே; எல்லாம் நாம் பலனடைவதற்காகத்தானே; நாம் உலகின் சகல காரியங்களிலும் ஈடுபடுகிறதும் அதற்காகத்தானே; நாம் உலகின் சகல ஐஸ்வரியங்களையும் தேடுகிறதும் அதற்காகத்தானே; உடலென்றும் உயிரென்றும் பாதுகாப்பதும் அதற்குத்தானே; உழைப்பதும்உழைப்புக் கேற்ற ஊதியத்தை தேடுவதும் அதற்காகத் தானே; உண்பதும், உடலை வளர்ப்பதும் உல்லாசத்தை விரும்புவதும் அதற்காகத்தானே.

ஆம் எல்லாம் நாம் நன்மையைத் தான் நாடுவோம். நாம் மாத்திரமென்ன! அகிலத்திலுள்ள அத்தனை ஜீவராசிகளும் அப்படித் தான்; அதிலும் அதிகமான பலனைத்தான் நாடுவோம்; இது இயற்கையேயாகும்.

செய்வன திருந்தச் செய் என்பது போல் நாம் செய்யக் கூடிய ஒவ்வொரு காரியமும் எக்காலத்திலும் என் நிலையிலும் நமக்கு நன்மையை தரக்கூடியதாக இருக்க வேண்டு மன்றோ !

எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாஹு தஆலா தன்னுடைய திருசித்தமாகிய குர்ஆனிலே திருவுளமானன்: "உங்களுடைய பொருளும் மனைவி மக்களும் துன்யாவுக்கு அலங்காரமாக இருக்கும்; நல்லமுலும் நல்லிபாதத்தும் ஆகிரத்துக்கு அலங்காரமாக இருக்கும்" என்று.

ஆகையால் துனியா வென்னும் இம்மையின் வாழ்க்கைக்காகவும் அதனுடைய சிறு நலனுக்காகவும் பாடுபட்டால் மாத்திரம் போதாது; சிதருண்டு போகும் இவ்வாழ்வுக்காக சிரத்தை கொண்டால் மாத்திரம் போதாது; அழிவுரக் கூடிய இவ்வாழ்வுக்காக நாம் முயற்சி எடுத்தால் மாத்திரம் போதாது.

அழிவே இல்லாததும் எச்சமயத்திலும் என் நிலையிலும் நமக்கு பூரண நன்மையை அளிக்கக் கூடியதுமான ஆகிரத்தென்னும் மறுமையின் வாழ்க்கைக்காகவும் நாம் பாடுபட வேண்டும். முடிவேயில்லாத

அவ்வாழ்வுக்காக நாம் முயற்சி எடுக்க வேண்டும். அந்த சிங்கார வாழ்வுக்காக நாம் சிரத்தைக் கொள்ள வேண்டும்.

அது தான் நமக்கு மென்மேலும் நன்மையையும் நாடியதையும் அளிக்கக் கூடியது. அது தான் நம் பிறப்பின் வாழ்வின் அனைத்தின் பலனையும் தருவதும் அது தான். இந்த இம்மையின் வாழ்க்கை நிலையற்றது, நிம்மதியற்றது, நிதானமற்றது. இதின் இன்பமோ க்ஷணநேரத்தில் மறையக்கூடியது.

அந்த மகிமை பெற்ற மருமையின் வாழ்வுக்காகத் தான் இந்த இமைப் பொழுதில் மறையக்கூடிய இம்மையின் வாழ்க்கை யுள்ளதும்கூட.

நாம் தீமையை நன்மையை எதை தேடினாலும் இம்மையில் தான் தேடிக் கொள்ள வேண்டும். இங்கு செய்வதின் பலனை மறுமையில் அனுபவிக்க முடியுமேயன்றி அங்கு நாம் எந்த நன்மையும் தேடிக் கொள்ள முடியாது.

நாம் உண்பதும் உறங்குவதுமே நம் காரியம்; அதுவே நாம் அடையும் பெரும்பலன் என எண்ணி, வீணில் விரயமாக்கி மருமை நாளில் கைசேதப்படுவதில் நாம் எந்த பிரயோஜனத்தையும் நிச்சயமாக காணவே முடியாது. ஆகவே, "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்பதற்கிணங்க நாம் உடலிலே உயிருள்ள போதே, மறுமை வாழ்க்கைக்கு ஆயத்தமாவது தான் இன்ஸானின் லக்ஷியமாகும்.

துன்யாவாகிறது ஒரு ஆழிக்கடல், அதிலே நன்மை யென்னும் முத்து சிப்பிகளும் வுள்ளன. தீமை யென்னும் மச்சம் சர்ப்பம் முதலை போர்கொத்த எத்தனையோ தீங்கை தரக்கூடிய விலங்கினங்களும் உள்ளன. ஆனால் நாம் நாட வேண்டியது எது? அழிவைத்தரக் கூடிய உலக மாயையென்னும் விலங்கினங்களின் ஒய்யாரத்தில் சிக்கி, அதற்கு இரையாவதையா? அல்லது அருளை தரக்கூடிய நல்லமலென்னும், முத்துக்களை நாடி நல்வாழ்வு பெருவதையா? இறைவனின் கட்டளைகளை செய்து கண்யவான்களாவதையா? அல்லது கடமையை மறந்த் கயவர்களாவதையா? உலகம் போற்றும் உத்தமர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் ஷரகை பேணி நாயனை வணங்கி நன்மை பெருவதையா? அல்லது நாயனையும் நபியையும் மறந்து நாய்போல் நரகில் கதரி துடிப்பதையா? நாம் நாட வேண்டியது எது? நாம் தேட வேண்டியது எது? என சிந்தித்து செயலாற்ற முற்படுவதே, நாம் அடையும் பெரும்பலனாகுமன்றோ.

# கலைஞர்கள் கவனத்திற்கு!

(வேளாங்கண்ணி, கவிஞர் சாந்திதாஸன்)

தணியாத தாகத்தில் மாந்தரிடை
    தகிர்க்கின்ற இன்றைய தன்னலத்தை
அணியணியாய் ஒளி பொறியும் ஆத்மீகத்தால்
    அகற்றிடுதல் சாலெனவே செப்புகின்றேன்! (1)

விஞ்ஞான காலத்தும் விளக்கம் நல்கி
    வன்பகைகளை நோக்காய் சிந்தையிலே
எஞ்ஞான்றும் மாராத இன்பச்சுவடு
    எங்கோன் மறையமுதல் ஏந்திடவே இயம்புகின்றேன்! (2)

வனிதையர் வாழ்வினை வளமாக்க
    வாள்போர்த் தொடுத்துள்ள வீராங்கனை
மணிமொழியார் நபிமரபின் மார்க்கத்திலே
    மகிழ்ந்திருந்த வரலாற்றை மொழியவே விழைகின்றேன்! (3)

துடிக்கின்ற குடியரசின் தலைக்கச்சான்றாய்
    துயில்கொள்ளும் அரசினைத் தட்டி எழுப்பி
வடித்தெடுத்த பதிமூன்று நூற்றாண்டின்
    வாகையினைப் பறைசாற்ற பகருகின்றேன்! (4)

விதவாவி வாகத்தைப்பிணைத்தெடுத்து
    வீதிதோறும் ஓலமிடும் ஓர்சாரார்க்கு
அதனையன்றே அல்லாஹ்வின் திருத்தூதர்
    அமல்நடத்திக்காட்டியதை அறைந்திட அவாவுகின்றேன்! (5)

உழைத்தோரின் ஊதியமுழக்கம்
    உலகெங்கணும் ஒலிக்கின்ற நேரத்திலே
விழைந்தார் நபிஅன்றே வாதையற
    விவேகமிருப்பின் உணர்க, என்றுரைக்கத்தூண்டுகின்றேன்!

# தவத்துது என்ற வெள்ளாட்டி

## மஸ்அலா

பக்தாத் என்னும் தேசத்தில் தாருஸ்ஸலாம் என்னும் பட்டணத்தில் ஒரு பெரிய பணக்கார வியாபாரியின் மகனை பதருஸ்ஸமான் என்பவர், தனது காலஞ் சென்ற தகப்பனரின் நல்லுபதேச ஒஸியத்தை மறந்து, பாவங்கள், அழிச்சாட்டியங்களில் துணிந்து வீண் செலவுகள் செய்து ஆஸ்தி முழுமையும் இழந்து விட்டார். அவரிடம் தவத்துது யென்கிற வெள்ளாட்டியைத் தவிர யாதொரு வஸ்துவும் இல்லாமலாகிவிட்டது. அச்சமயத்தில் அவ்வெள்ளாட்டி, தன்னை அவ்வூர் பாதுஷாவான ஹாரூன் ரஷீதுயிடம் விற்று தனக்குரிய கிரயம் பதினாயிரம் தங்கக்காசுவாங்கிக் கொள்ளுமாறு, தனது நாயகன் பதுருஸ்ஸமானிடம் சொன்னாள். அதன்படி பதருஸ்ஸமான் பாதுஷாவிடம் வெள்ளாட்டியைக் கொண்டுபோய், பதினாயிரம் தங்கக்காசுகேட்க, பாதுஷா ஒரு சாதாரண வெள்ளாட்டிக்கு பதினாயிரம் தங்கக்காசு கொடுக்க இயலாதென்றார். அதன் பேரில், இவ்வெள்ளாட்டி சாதாரணமானவ ளல்லவென்றும் மார்க்க அறிவுகளில் மிக தேர்ந்தவளென்றும், சந்தேகப்படில் சோதிக்குமாறும் பதருஸ்ஸமான் சொன்னார். அப்பொழுது பாதுஷா தனது சபையிலுள்ள அறிவுள்ள உலமாக்களைப் பார்த்து, அவ்வெள்ளாட்டியிடம். மார்க்க அறிவுகள் விஷயமாக கேள்விபோட்டு சோதிக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த கிதாபு, அமீருல் முஃமினீன் சுல்தான் ஹாரூன் ரஷீது றஹிமதுல்லாஹி அலைஹி அவர்கள் முன்னிலையில் உலமாக்களுக்கும் தவத்துதென்கிற வெள்ளாட்டிக்கும் நடந்த ஸுவால், ஜவாபாகிய ஹதீது கிஸ்ஸாவைப் பொதிந்துள்ளது. யாவரும் இந்த கிஸ்ஸா ஹதீது முற்றும் படித்து அதன்படி அமல் செய்து வந்தால், அவர்களுக்கு மிகுந்த அறிவுகளும் தவாபுகளும் உண்டாகு மென்பதில் ஐயமில்லை. ஆதலால் ஒவ்வொரு முஸ்லிமும் இக்கிதாபை வாங்கி படித்து பிரயோஜனமடைவீர்களாக.

இதன் விலை ரூ. 2-0-0

ஷை அறபுத் தமிழில் விலை ரூ. 2-8-0

---

கிடைக்குமிடம்:-

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# மதீனாவின் பிரதம நீதி மன்றத்திலே...!

பெரியகுளம் மௌலவி B. A. கலீலுர் ரஹ்மான் ஸாஹிப். (ரியாஜி)

நானிலத்திற்கு நல்லருட் பாக்கியமாக வாய்ந்த நபிகள் கோன் (ஸல்) அவர்கள் நீதியின் உருவாக அமைந்திருந்தார்கள். ஆத்மீகத் துறையிலும் அரசியல் துறையிலும் எக்காலத்திலும் எந்நாட்டவரும் பின் பற்றத்தக்க வழிகளை தங்களது சொல்லிலும் செயலிலும் செய்து காட்டிச் சென்றுள்ளார்கள். அவர்களது போதனையிலே ஆத்மீகமும் அரசியலும் ஒன்றாகவே பிணைந்திருந்தன. அவர்கள் கருணைமிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள். அதே சமயத்தில் தனக்கல்லாமல் பிறருக்குத் தீங்கிழைத்தவர்களைத் தண்டிக்கவும் செய்தார்கள். குற்றக்கூண்டிலே குற்றவாளி நிறுத்தப்பட்டு விடின் நீதியின் தராசிலே பாகுபாடு என்ற தட்டுகளைக் காணமுடியாது.

பிரதம நீதிமன்றம் எழுபது அடி நீளமும் அறுபது அடி அகலமும் ஏழு முழ உயரமுள்ள சுவர்களும், ஈத்தமர ஓலைகளாலும், நிர்மாணிக்கப்பட்ட பில்டிங்; மஸ்ஜிதுன் நபவி.

பிரதம நீதிபதி அகில உலகிற்கும் அருட்பிறப்பாய் அனுப்பப்பட்ட அண்ணல் நபி முஹம்மது (ஸல்) அவர்களாகும்.

ஜைனப்பின்து ஹாரிது என்ற யூதமாது, ஸர்வரே ஆலம் (ஸல்) அவர்களுக்காக உணவு சமைத்து விருந்தளிக்கிறாள். அதில் நஞ்சு கலந்திருக்கும் விஷயம் விளங்கி விடுகிறது. யூதமாது குற்றக் கூண்டிலே நிறுத்தப் படுகிறாள்.

நீதிபதி:—இவ்வுணவில் நஞ்சு கலந்திருந்தனையா?

யூதமாது:—ஆம்.

நீதிபதி:—ஏன் இந்த வேலையைச் செய்தாய்?

யூதமாது:—நீங்கள் சக்ரவர்த்தியாக மட்டும் இருப்பீர்களாயின் இந்த நஞ்சு கலந்த உணவிலேயே மாண்டுபோவீர்கள். ஆனால் இறைவனின் தூதர் என்பது உண்மையாயிருப்பின் இது உங்களுக்கு ஒரு பாதகமு மளிக்காது. இதை சோதிக்கவே இப்படிச் செய்தேன்.

(இதைக் கேட்ட நீதிபதியவர்கள் அவளுக்கு மன்னிப்பு அளித்து விட்டார்கள்)

சில நாட்களுக்குப் பின் மறு முறையும் ஒரு உத்தம ஸஹாபிக்கு நஞ்சு ஊட்டி விட்டாள். அதிலேயே அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள்.

அவளை இழுத்துக் கொண்டு வரப்பட்டது. சாட்சிகள் பலமாக இருந்தன. அவளை தூக்கிலிடும்படி பிரதம நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. அவளும் தூக்கிலிடப்பட்டு விட்டாள் என்று அனஸிப்னு மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள்.

வழிப்பறி கொள்ளை களவு செய்து வருவதாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவன் கூண்டிலே ஏற்றப்படுகிறான். குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டது. உடனே அவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. சிறைக் கூடத்திலேயே அவன் செத்து மடிந்தான் என்று அப்துல்லா ஹிப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்.

ஒரு பெண்ணை கொலை புரிந்த யூதனொருவனை நீதிமன்றத்திலே கொணர்ந்து நிறுத்தப் பட்டது. கொலை புரிந்தது உண்மை என்பதற்கு சாட்சிகள் சரியாக இருந்தன. அவனையும் கொன்று விடும்படி நீதி மன்றத்திலிருந்து உத்திரவு பிறந்தது என்று அனஸிப்னு மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள்.

சில யூதர்கள் ஒரு ஆணையும் பெண்ணையும் நீதி மன்றத்திற்கு இழுத்துக் கொண்டு வருகிறார்கள். இறை தூதுவரே! இவ்விருவரும் விபச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் இவர்கள் விவாகமானவர்களுங்கூட, என முறையிடுகிறார்கள். சாக்ஷிகளையும் சமர்ப்பிக்கப் பட்டது. குற்றம் உறுதியாகிவிட்டவுடன் இருவரின் மீதும் கல் எரியும்படி பிரதம நீதிபதி உத்திரவிடுகிறார்கள். இத்தீர்ப்பின் படி குற்றவாளிகளின்மீது கல்மாறி பொழியப்படுகிறது. அந்த ஆண் சர்வ அடிகளையும் தான் தாங்கிக் கொண்டு அப்பெண்ணை எப்படியாவது காப்பாற்றி விடவேண்டுமென்று பெரிதும் முயற்சித்து அவள்மீது கல் விழாமல் தடுத்தான். இப்படி செய்வதை விட்டும் அவனை தடுக்கப்பட்டது, என்று இப்னு உமர் (ரலி) இயம்புகிறார்கள்.

அரபு நாட்டின் பிரபலமிக்க வர்க்கத்தினர்களாகிய பனூ மக்ஸூமிலுள்ள ஒரு பெண்ணின் மீது திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு நீதி மன்றத்தில் கொணர்ந்து நிறுத்தப்பட்டது. எப்படியாகிலும் சிபாரிஷ் செய்து அப்பெண்ணை விடுதலை செய்துவிட வேண்டுமென்று மக்கள் விரும்பி, இது விஷயத்தில் பிரதம நீதிபதியான பெருமானாரிடம் யார் பேசுவது? என்பதைப் பற்றி கலந்தாலோசித்தார்கள்.

பெருமானாருக்கு மிகப் பிரியமுள்ள இளைஞரான உஸாமா (ரலி) என்பவரையே சிபாரிஷ் செய்ய அனுப்பவேண்டும், அவர்தான் தைரியமாகப் பேசக் கூடியவர், என்று சிலர் அபிப்பிராயம் கூறவே, சபையோர்கள் உஸாமாவையே சிபாரிஷ் செய்ய அனுப்பினார்கள்.

பிரதம நீதிபதியிடம் உஷாமா மக்களின் அபிப்பிராயத்தை வெளியிட்டார். இதைச் செவியுற்ற நீதிபதியவர்கள், ஏ! உஷாமா என்ன

அல்லாஹ் விதித்த எல்லையின் விஷயத்தில் சிபாரிஷ் செய்ய துணி கிறீயா? என்று கேட்டார்கள். "இறை தூதவரே! என்னை மன்னித்து விடுங்கள். நான் தவறிழைத்து விட்டேன்'' என உஷாமா (ரலி) கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள்.

இதன் பின் பெருமானார் (ஸல்) ஒரு பொது மேடையில் நின்று உணர்ச்சிமிக்க சொற்பொழி வாற்றினார்கள். அதில் அவர்கள் குறிப் பிட்டதாவது :—

உங்களுக்கு முன் சென்ற மக்கள், பெரியோர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் திருடிவிட்டால், அவர்களை கவனிக்காமல் விட்டு விடுவார் கள். எளியவர்கள் திருடிவிட்டால் அவர்களின்மீது சட்டத்தைப் பிரயோகிப்பார்கள். ஆனால், என் ஆத்மா எவன் கைவசத்தில் இருக் கின்றதோ அந்த பரிசுத்த அல்லாஹ்வின்மீது ஆணையாக! முஹம் மதின் மகள் பாத்திமா திருடியிருந்தாலும் அவர்களது கரங்களை நான் கத்தரிக்கவே செய்வேன்.

பின் பிரதம நீதிபதியவர்களின் ஆக்கினைப்படி திருடிய பெண் ணின் கரத்தை கத்தரிக்கப் பட்டது என்று அப்துல்லாஹிப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்.
வாசகர்களே !

நீதி நேர்மைக்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா? இவைகள் மட்டுமல்ல, இஸ்லாமிய சரிதையினைப் புரட்டிப் பாருங்கள். குற்ற வாளி குற்ற கூண்டிலும், நீதிபதி தன் ஸ்தானத்திலும் உட்கார்ந்து விடின், அங்கே அரசன், ஆண்டி, பண்டிதன், பாமரன், வலியவன், எளியவன், இனத்தான், மாற்றான், தந்தை, தனயன் என்ற பாகுபாட் டினைக் காணமுடியாது. ஏன்? அது அல்லாஹ்வின் ஆட்சி, அல்லாஹ் வகுத்துத் தந்த சட்டம், அல்லாஹ்வின் ஆக்கினையில் தன் கை வரிசையை செலுத்த மனிதனுக்கு என்ன உரிமை இருக்கிறது? நாம் அநீதமிழைத்தால் அல்லாஹ் தண்டிப்பான் என்ற பயம் நீதிபதிக்கு!

இன்று உலகிலே உண்மையான சமாதானத்தையும் சாந்தியையும் காணவேண்டுமேயானால் அகிலத்திலே அல்லாஹ்வின் ஆட்சி ஏற்பட வேண்டும், அல்லாஹ் வகுத்துத் தந்த சட்டம் குர்ஆன்! அதை செயல் முறையில் செய்து காட்டிச் சென்றவர் மதீனமா நகர் ஹை கோர்ட்டின் பிரதம நீதிபதியான நபி முஹம்மது (ஸல்) அவர்களாகும்.

(மேற் குறிப்பிட்ட சரித்திரக் குறிப்புகள் புகாரி முஸ்லிம் முவத்தா மஷாரிக், என்ற ஹதீது கிரந்தங்களிலிருந்து எடுத்தெழுதப் பட்டவை களாகும்.)

# றத்துன்னஸாரு வென்னும்
# திரியேகத்துவ நிவாரணம்

இப்புத்தகமானது நஸாருக்க ளென்ற கிறிஸ்துவ மதத் தவர்கள் நம் இஸ்லாமைப் பற்றி கேவலமாகவும், நபிஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தூஷிப்பாகவும், அநேக விஷயங்களை தம் புத்தகங்களில் எழுதி ஒவ்வொரு ஊர்களின் கிராமங்களிலும், தெருக்களிலும், ஸ்கூல்களிலும் போதித்து கொண்டு திரிகிறபடியால், அவர்களுடைய பொய்யான மிரட்ட லான வஞ்சகமான சங்கதிகளைக் கேட்கும் நம் முஸ்லிம்களு டைய அகீதாக்கள் மாறும லிருக்கும் பொருட்டு அவர்களுக்கு தகுந்த முகாந்திரங்களைக் கொண்டு விடை கொடுக்கவும் சக்தி யுள்ள இருமையான புஸ்தகம்.

இதிலடங்கிய 7 அதிகாரங்களில் 1-வது அல்லாஹு தஆலாவின் வல்லமைகள், 2-வது இயேசுவின் சரித்திரம், 3-வது நம்முடைய நபி அவர்களை குறித்து முன் நபிமார்கள் சொன்ன முன் அறிக்கை, 4-வது நம்முடைய நபி பிரசன்ன மாவார்களென்று சிலர் குறிப்பாய் சொன்னது, 5-வது நம் முடைய நபிகள் நாயகத்துடைய சரித்திர சுருக்கம், 6-வது அவர்களுடைய முஃஜிஸாத் தென்னும் அற்புதங்கள், 7-வது கிருஸ்துவர்களின் கேள்விக்கு முஹம்மதிய்ய அறிஞர்களின் சரியான பதில்கள் எல்லாம் இந்த 7 அதிகாரங்களிலும் அடங்கி யிருக்கின்றன. ஆகையால், இந்தப் புஸ்தகம் ஒவ் வொரு முஸ்லிம்களுடைய ஈமானைக்காக்கவும் அவர்களுக்குத் தகுந்த முகாந்திரங்களால் றத்து செய்யவும் வெகு அவசி மானது.

ஆப்பைண்டு செய்யப்பட்டது விலை ரூ. 2

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

**ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.**

**நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.**

மாயமாய்

# மறைந்த மங்கை.

## (தொடர் கதை 8-வது பகுதி)

### 14-வது அத்தியாயம்.

"தூக்கு" என்று சாதிர் சப்தமிட்டான். சோடேவை சர்க்கரை மூட்டையுடன் இருவரும் தூக்கினர்கள். கடலில் போடப்போகும் தருணத்தில் திடீரென்று ஒரு படகு மோட்டாரின் சப்தம் கேட்டது. சாதிர் இச்சப்தத்தால் பயந்து சுற்றிபார்த்தான். தங்கள் படகை நோக்கி ஒரு மோட்டர் போட் வருவதைப் பார்த்தான். அதில் துடுப்பு களும் தொங்கிக் கொண்டிருந்தன. துடுப்புகளினுதவியால் படகு வந்து, அருகே வந்ததும் அதிலிருந்த மோட்டரை ஸ்டார்ட் செய்ததை சாதிர் அறிந்தான்.

"படகிலேயே போடுங்கள்" என்று வரும் படகைஓட்டுபவரின் சப்தம் வந்தது. சாதிரும் பிரேஸரும் என்ன செய்வ தென்று தெரியாமல் கையில் பளுவுடன் நின்றார்கள். கிளிக்! என்று மின்வெட்டுவதுபோல் ஒரு சப்தம் கேட்டது. "அப்பாடி" என்று சொல்லியவண்ணம் பிரேஸர் தூக்கியிருந்த சோடேவை படகிலேயே போட்டு, தனது தோளை பிடித்துக்கொண்டு விழுந்தான். சர்க்கரை மூட்டை பக்கம் தூக்கின சாதிர், பிரேஸர் விழவே, கையிலிருந்த பளு வால் பின்பக்கம் சாய்ந்தான். "ஷம்ஸ் வந்து விட்டான் அவனை விடக் கூடாது" என்று சாதிர் சொல்லிக்கொண்டே, தனது கை துப்பாக்கி யை யெடுத்தான். கிளிக்! இன்னொரு சப்தம் ஷம்ஸின் துப்பாக்கி யிலிருந்து வரவே, சாதிர் கையிலிருந்த துப்பாக்கி எகிரியது. கை யிலும் அடிபடவே சாதிருக்கு கோபம் பொங்கியது. தனது பலத் தினல் ஷம்ஸை எப்படியும் தொலைக்கலாமென்று மனதிலெண்ணி, சாதிர் தானிருந்த படகிலிருந்து ஷம்ஸ் ஓட்டிவந்த படகில் குதித்தான். அவன் செயலை யறிந்த ஷம்ஸ் இன்னொரு முறை சுட்டார். குறி தவறியது. சாதிர் பாயும்போது, துப்பாக்கியுள்ள ஷம்ஸின் கையை பிடித்தவாறு பாய்ந்தான். சாதிர் பாய்ந்த வேகத்தால் ஷம்ஸு சாதி ருக்கு கீழே மாட்டிக் கொண்டார். படகு அலமரித்தது. கீழே மாட் டிய ஷம்ஸ் ஒரு கையால் மேலிருந்த சாதிரின் நாடியில் ஒரு பலத்த குத்து குத்தினர்.

இதே சமயத்தில் அடுத்த படகில் விழுந்திருந்த பிரேஸர் எழுந்து பார்த்தான். தான் தனியாக படகிலிருக்கவே தான் மாத்

திரம் தப்பித்துக் கொள்வதே நலமென்று துடுப்புகளை யெடுத்து படகை ஓட்டினன்.

ஷம்ஸின் குத்தை ஒருவாறு தாங்கிக்கொண்டு சாதிர், "டேய் ஓடாதே. எனக்காக நில்லு இன்னும் ஒரு நிமிஷத்தில் இவனை வேலை முடித்து விட்டு வருகிறேன்" என்று சப்த மிட்டான். ஆனல் பிரோஸர் படகை ஓட்டிக்கொண்டு போகமுடியவில்லை. தோளில் ஏற்பட்ட காயத்தால் மறுமுறையும் ஸ்மரணையற்று படகிலேயே சரிந்தான்.

இங்கு சாதிரும் ஷம்ஸும் உடன் எழுந்தார்கள். சாதிர், ஷம்ஸின் பேரில் குத்தியவாறு விழுந்தான். விழும் சமயத்தில் ஷம்ஸ் தனது தலையால் சாதிரை முட்டியதுடன், வலது கையால் ஒரு குத்து குத்தி, அத்துடன் இடது கையாலும் முகத்தில் குத்தினர். இந்த இரண்டு குத்துகளை சமாளித்து நிற்க சாதாரண ஆட்களால் முடியாது. ஆனல் சாதிரோ தடியன்! மிக பலமுடையவன்! அதிலும் தான் தப்பித் துக்கொள்ள செய்யும் சண்டடை! அவன் குத்துகளைத் தாங்கிக்கொண் டதுமல்லாமல், குத்தின் வேகத்தால் படகிலிருந்து கீழே விழாமல் ஷம்ஸின் கையைப்பிடித்துக் கொண்டான். அத்துடன் ஷம்ஸை இழுத்து சேர்த்து கட்டி நெருக்கினன். ஷம்ஸுக்கு தனது விலா எலும்புகள் உடைவதுபோல் தோன்றியது. இன்னும் கொஞ்சநேரம் நெறுக்கினல், தன்னல் பின் ஒன்றும் செய்யாமுடியா தென்றெண்ணி, தனது முழு பலத்துடன் அவனை பின்புறம் தள்ளினர். சாதிர் பின் ஞல் விழுந்தாலும் ஷம்ஸை பிடித்த பிடியை விடவில்லை. ஆதலால் இருவரும் படகின் ஓரத்தில் விழுந்து உருண்டு தண்ணீரில் விழுந்தார் கள்.

தண்ணீரில் இருவரும் விழுந்து மேல் கிளம்பியபோது, சாதிர் தனது ஜேபியிலிருந்து ஒரு கையால் ஒரு கத்தியை எடுத்து தனது பற் களால்கடித்து விறித்து தாமதம் செய்யாமல் ஓங்கி ஷம்ஸின்பேரில் குத் தினன். இதைப்பார்த்துக் கொண்டிருந்த ஷம்ஸு, குத்து தன்மேல் படுவதற்குள் ஒரு கையால் அவன் கையை பிடித்தார். அதே சமயத் தில் மறுகையால் சாதிரின் முகத்தில் விடாமல் குத்தினர். சாதிர், தனது மூக்கிலும் கண்களிலும் விழுந்த குத்துகளின் கஷ்டத்தால், தனது கையிலிருந்த கத்தியை விட்டு, ஷம்ஸின் தலை மயிரைப்பிடிக்க முயற்சித்தான். தலை மயிர் தனது கையில் அகப்படவே, சாதிர் தனது முகத்தை தண்ணீரின் வெளியே வைத்தவாறு ஷம்ஸை தண்ணீருக் குள் அழுத்தினன். அதை விட்டு தப்பித்துக்கொள்ள ஷம்ஸ் தனது கைகளினல் தண்ணீருக்குள்ளேயே சாதிரை குத்தினர். ஒரு குத்தா வது ஒழுங்காக சாதிரின்மேல் படவில்லை; ஏனெனில் ஷம்ஸால் சாதி ரின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. ஒன்றிரண்டு குத்துகள் சாதிர் மேல் பட்டன. அவன் இக்குத்துகளின் உபத்திரவத்தால், ஷம்ஸின்

தலை மயிரை விட்டிருப்பான். ஆனால் இன்னும் கொஞ்ச நேரம் ஷம்ஸ் தண்ணீருக்குள் இருந்தால் போதுமென்று பல்லைக்கடித்துக் கொண்டு, குத்துகளை பொருட்படுத்தாதது போலிருந்தான். அச்சமயத்தில் ஷம்ஸ் இன்னொரு குத்து விட்டார். அது சாதிர் முகத்தில் சரியான இடத்தில் படவே, ஷம்ஸின் தலை மயிரைப் பிடித்த பிடி விடப்பட்டது.

ஷம்ஸ் உடனே தண்ணீருக்குள் மேல் வந்து பார்த்தார். சாதிர் கொஞ்ச தூரத்தில் மிதப்பதையும், இன்னொரு பக்கத்தில் இரு படகுகள் மிதப்பதையும் பார்த்தார். தான் அதிகநேரம் தண்ணீருக்குள்ளேயே யிருந்ததால், தனது மூச்சை பலமுறை இழுத்து வெளியிட்டார். பிறகு சாதிர் பக்கம் திரும்பினார். சாதிரைக் காணோம். உடனே ஷம்ஸ் தண்ணீருக்குள் முழுகி சாதிரைத் தேடி நீந்தினார். தனது கையில் சாதிரின் உடம்பு அகப்படவே, அவனை தண்ணீருக்குமேல் தூக்கினார். "உன்னை இங்கேயே விட்டுவிடுவேனென்று நினைத்தாயா? உனக்கு குறைந்தது 10-வருட சிறை தண்டனையாவது கிடைக்குமாறு செய்வேன்" என்று ஸ்மரணையற்ற சாதிரிடம் சொல்லியவாறு அவனை இழுத்துக்கொண்டே தனது படகை நோக்கி நீந்தினார். தனது படகினருகே வந்ததும், சாதிரை ஒருகையால் பிடித்துக்கொண்டே, மற்றொரு கையால் படகை பிடித்து தான் மாத்திரம் ஏறினார். பிறகு படகிலிருந்து, தனது இரு கைகளால் சாதிரை தூக்கி படகில் போட்டார். தனது படகை மற்ற படகின் பக்கத்தில் ஓட்டி அந்த படகை தனது படகுடன் சேர்த்து கட்டினார். பின்பு அடுத்த படகில் குதித்து, பிரேஸரின் தோளில் பட்ட காயத்தின் பேரில், ரத்தம் கசியாமல் ஒரு கட்டு கட்டினார். சோடேவை கவனித்தார். இன்னும் கொஞ்சநேரத்தில் உஷாருடன் எழுந்திருப்பானென்பதை யறிந்தபின், தனது படகில் குதித்து, மோட்டரை ஸ்டார்ட் செய்து கறையை நோக்கி ஓட்டினார்.

அரைமணி நேரத்திற்கு பின் பிளப் ஹவுஸிற்கு, இன்ஸ்பெக்டர் தாமஸும், பாட்கினும், டெலிபோன் மூலம் தங்களுக்குத் தெரிவித்ததால், காரில் ஓடி வந்தார்கள். ஒரு நாற்காலியில் கைகளில் விலங்குகளுடன் கட்டப்பட்டிருந்தான் சாதிர். ஷம்ஸ், சோடேவின் முகத்தில் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தார். ஒரு கட்டிலின் பேரில் ஸ்மரணையற்றுகிடந்தான் பிரேஸர். அவன் தோளிலுள்ள காயத்தை பார்த்த இன்ஸ்பெக்டர் பாட்கின் "இக்காயம் உங்களால் ஏற்பட்டதா?" என்று கேட்டார். "சோடேவின் உயிரைக்காப்பாற்ற வேறுவழியில்லாததால், செய்தேன்" என்று சொல்லி, கடலில் நடந்தவை பூராவும் விபரித்தார் ஷம்ஸ். "உங்கள் கார்ஓட்டும் டிரைவரும் வந்திருக்கிறானா?" என்று ஷம்ஸ் பாட்கினைக் கேட்க "ஆம்! அத்துடன் இன்னும் இரண்டு கான்ஸ்டேபிளும் இருக்கிறார்கள்" என்றார். "முதலில் பிரேஸரை

ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் அவன் காயத்தை கவனிக்குமாறு செய்யுங்கள். பிறகு அவனையும் இந்த சாதிரையும் சோடேவை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டி அடைத்துவையுங்கள்'' என்று ஷம்ஸ் சொன்னார்.

இதற்கிடையில் சோடே அசைவதைக்கண்ட ஷம்ஸ் அவனைக் கவனித்தார். அவன் கண்ணைத்திறந்து ஷம்ஸைப் பார்த்ததும் "நீங்கள் சரியான சமயத்தில் வந்தீர்களா? நான் எனது காரியம் முடிந்துவிட்டது என்று எண்ணினேன்'' என்றான். "ஆம்! ஒரு நிமிஷம் பிந்தியிருந்தாலும் நீ இங்கிருக்கமாட்டாய். தற்போது உனக்கு உடம்பு எவ்வாறிருக்கிறது? நீ எப்படி மாட்டிக்கொண்டாயென்று சொல்லமுடியுமா?'' என்று ஷம்ஸ் கேட்டார்.

"எனக்கு உடம்பு நன்றாகத்தான் யிருக்கிறது. நான் எப்படி மாட்டிக் கொண்டேனென்பதிருக்கட்டும். ஸூஸியுடன் கார்விழுந்ததே அதை ஓட்டியவன் இடது கையன், உங்களுக்குத் தெரியுமா?''

"எனக்கு அதுவும் தெரியும் அந்த இடதுகையன் யாரென்றும் தெரியும்''

"என்ன! உங்களுக்குத் தெரியுமா? சொல்லுங்கள் அவன்பெயரை. இப்பொழுதே அரஸ்ட்செய்கிறோம்'' என்று அவசரப்பட்டவாறு தாமஸ் கேட்டார். ஷம்ஸ் பதில் சொல்லுவதற்குள், அங்குள்ள டெலிபோன் மணி அடித்தது.

"அந்தபோனை யாரும் தொடாதீர்கள். இன்னும் சோடேவை கடலில் தள்ளிவிட்டு, சாதிரும் பிரேஸரும் திரும்பவில்லை என்று பிரபஸர் சாண்டர் நினைத்துக் கொள்ளட்டும்'' என்று ஷம்ஸ் சொன்னார்.

"பிரபஸர் ஸான்டரா? அவர் யார்?''

"அவர் பார்வைக்கு மிக சாந்தகுணமுடைய ஒரு பிரபஸர்; ஸன்கோர்ட்டெர்ரஸ் 8 நெ. வீட்டில் தங்கியிருப்பவர்; அவருடைய இன்னொரு பெயர் ஜான்ஸன்; அவர்தான் வெஸ்டர்பியைக் கொன்ற இடது கையன்'' என்று ஷம்ஸ் சொன்னார்.

"அப்படியானல்'' என்று தாமஸ் சொல்வதற்குள்

"பொறும். அவசரப்படாதேயுங்கள். அந்த பிரபஸர் உடனே ஓடிவிடக்கூடியவரல்லர். அவர் ஒரு பெருந்தொகை பணத்திற்காக இவ்வளவு கஷ்டப்பட்டபின் தன் காரியம் கைகூடாமல் ஓடமாட்டார். அவரின் ரகசியம் போலீஸுக்கு கொஞ்சமும் தெரியாதென்று இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறார்'' என்றார் ஷம்ஸ்.

"இன்னும் உமது ஆட்கள் 2 பேர் அவ்வீட்டைப்பார்த்துக் கொண்டிருக்கும்போது ரேனிபர்கையும் ஒலிவாவையும் வெளியே கொண்டுவரமுடியாது. ரேனிபர்கைவிட்டு விட்டு பிரபஸர் ஓடமாட்டார். அதுவிஷயம் ஒரு இரகசியம். பிரபஸருக்குத் தெரியும். அந்த இரகசியம் எனக்கும் தெரியுமென்பது பிரபஸருக்குத் தெரியாது" என்று ஷம்ஸ் சொல்லியபின் சோடே பக்கம் திரும்பி "இன்னும் நீ ஏதும் சொல்ல வேண்டியதுண்டா?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை. ஸூஸியினிடம் நான்போகும்போது அவளால் ஒரு வார்த்தைக்கு மேல் சொல்லமுடியவில்லை"

"என்னதான் சொன்னாள்?" என்று ஷம்ஸ் கேட்கும்போது, இன்ஸ்பெக்டர் பாட்கின் பிரேஸரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்.

"அவள் ஏதும் சொல்வாளென்று அவளைத்தூக்கினேன். பேச வில்லை" என்றான் சோடே.

"ஒரு வார்த்தைக்கு மேல் சொல்லவில்லை என்றாயே, அது என்ன வார்த்தை?" என்று ஷம்ஸ் கேட்டார்.

"தூக்கு "Lift" என்பதைத்தான் கேட்டேன். உடனே அவளை தூக்கி ஏதோ சொல்லப்போகிறாளென்று கவனித்தேன். அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை"

"அவ்வளவுதானா" என்று சொல்லிக்கொண்டே ஷம்ஸ் யோசித்தார். ரேனிபர்க்கையும் ஒலிவாவையும் எங்கு அடைத்து வைத்திருக்கிறார்களென்பதை சொல்லியிருந்தால் நலமாயிருக்கும் என்று சிந்தித்தார். திடீரென்று "தெரிந்துவிட்டது" என்று, தன்னை யறியாமல் ஷம்ஸ் சப்தமிட்டார். "என்னது? தெரிந்துவிட்டது!" என்று தாமஸ் ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஸூஸிதான் சொல்லிவிட்டாளே தன்னை தூக்கு என்றுசொல்ல சொல்லவில்லை. Lift" என்றாள். அந்த வீட்டில் இரகசியமாக லிப்ட் (மெத்தையிலிருந்து கீழுக்கும் கீழிருந்து மேலுக்கும் எலக்டரிக் உதவியால்போகும் அறை) யிருக்கவேண்டும். சீக்கிரம், பிரேஸர்போகும் காரிலேயே, நீங்களும் பாட்கினும் சாதிரையும் கூப்பிட்டுக்கொண்டு போங்கள்" என்றார் ஷம்ஸ்.

"நீங்கள்?" என்று தாமஸ்கேட்க, "நானும் சோடேவும் மோடர் போட்டில் போய், அதைஇரவல் வாங்கியவனிடத்தில் திருப்பிக்கொடுத்து விட்டு, உங்களுக்கு முன் போலீஸ் ஸ்டேஷனில் காத்துக்கொண்டிருப்போம். தாமதம் செய்யாமல் அவர்களை உடனே பிடிக்கலாம்" என்று ஷம்ஸ் பதிலித்தார்.

"கொஞ்ச முன்பு நான் சொல்லியபோது, அவசரப்படவேண்டாம், பொறுத்து கவனிக்கலா மென்றீர்கள். தற்போது திடீரென்று சீக்கிரம் காரியத்தைக் கவனிக்கவேண்டு மென்கிறீர். ஒன்றும் விளங்கவில்லையே" என்று தாமஸ் கேட்டார்.

"கொஞ்ச முன்பு, ரேனிபர்க் ஒலிவா இவர்களை மறைத்துவைக்கப் பட்ட இடம் தெரியாமலிருந்தது" என்று ஷம்ஸ் பதிலளித்தார்.

## 15–வது அத்தியாயம்.

ஷம்ஸ் சோடேவுடன், பாட்கினின் அறையில் தாமஸுடன் யிருந் தனர். பாட்கினும் சில போலீஸ் கான்ஸ்டேபிளுடன் அங்கிருந்தார். மற்ற போலீஸ் கான்ஸ்டேபிள்களை யெல்லாம், 6-8-நெம். வீடுகளை பார்த்துக் கொண்டிருக்கும் இருவர்களுடன் கலந்து இரு வீட்டையும் சுற்றி காவல் கார்த்துக் கொண்டிருக்குமாறு அனுப்பப்பட்டிருந்தனர்.

"பக்கத்து அறையில் எனது பெயரை சொல்லுகிறவர் யார்?" என்று சொல்லிக் கொண்டே ஷம்ஸ் எழுந்து, கதவை திறந்து பக்கத்து அறையைப் பார்த்தார். அங்கு சார்ஜென்ட் ஒருவரிருந்தார். அவருக்கு முன் கவலையுடன் உட்கார்ந்திருந்தார் ரோஸன். அவரிடம் சார்ஜென்ட் "ஷம்ஸ் இங்கிருக்கிறாரென்று யாருங்களுக்கு சொன்னது? அப்படியே நீர் சொல்வது படி அவர் இங்கிருந்தாலும், உங்களால் பார்க்க முடியாது" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

"பரவாயில்லை சார்ஜென்ட். ரோஸன்! உன்னை லண்டனிலேயே இருக்குமாறு சொன்னேனே, உன் முகத்தைப் பார்த்தால் மிக கஷ்டப் பட்டிருப்பது போல் தோன்றுகிறது, சரி, நீ வந்து விட்டாய்" என்றார் ஷம்ஸ்.

"ஷம்ஸ்! உங்களை கண்டு பிடிப்பதற்கு எவ்வளவு கஷ்டம்" என்று சொல்லி, ஷம்ஸ் கையைப் பிடித்துக் கொண்டு "நான் அந்த வீட்டிற்கு போவேனா. போனால் தான் நீங்கள் மாட்டிக் கொள்வீர்களே. என்னால் லண்டனில் தங்க முடியவில்லை. கவலை அதிகமாகவே, போலிஸ் ஸ்டேஷனுக்கு வந்து எப்படியாவது உங்களைக் கண்டு பேச வேண்டு மென்று இங்கு வந்தேன். ஒலிவா எங்கே? அவளுக்கு என்ன நேர்ந்தது?" என்று பறபறப்புடன் கேட்டார். "கவலைப் படாதே. இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் ஒலிவாவை உன்னிடம் சேர்க்கிறேன். இப்பொழுது அவளைக் காப்பாற்ற போகிறோம். நீயும் வருகிறாயோ?"

"கட்டாயம் வருகிறேன், அவளைப் பிடித்தவன் என் கையில் மாட்டினால், எனது மனதையும் திருப்தி செய்து கொள்வேன். எப் பொழுது புறப்பட வேண்டும்?"

"இப்பொழுது தான்" என்று சொல்லும் போது, தாமஸ், பாட்கினும் மற்றவர்கள் இவர்களிருந்த அறைக்கு வந்தார்கள்.

"எனது கார் வெளியில் நிற்பாட்டி யிருக்கிறேன்" என்று ரோஸன் சொல்ல "அது அங்கேயே இருக்கட்டும்" என்று ஷம்ஸ் சொன்னார். பிறகு போலீஸ் மோட்டரில் எல்லாரும் நெருக்கமாக உட்கார்ந்து, ஸன் கோர்ட் ட்ராஸ் அருகாமையில் போய் நின்றார்கள். காரை விட்டு எல்லோரும் இறங்கினார்கள். அதில் தாமஸ் தான் மிகவும் சந்தோஷமாக தனது ஜேபியிலுள்ள விலங்குகளை குலுக்கியவாறு இறங்கினார். ஏனெனில் இக்கூட்டத்தை பிடித்ததும், மறுநாள் பத்திரிகையில் பெரிய தலையங்கத்துடன் தாமஸின் பெயர் கொட்டை எழுத்துகளில் பிரசுரமாகும். வழமைபடி, ஷம்ஸ் இதில் முக்கியத்துவமானவராக யிருந்தாலும், போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கே அந்த புகழைப் பெற்றுக் கொள்ளுமாறு சொல்லி விடுவார்.

"ஷம்ஸ்! நான் சரியான சமயத்தில் வந்தேன். ஒலிவாவைக் கண்டு பிடிப்பது ஒரு புறமிருக்க, போலீஸுடன் சேர்ந்து ஒரு கொலை கூட்டத்தை பிடிப்பதில் நானும் கலந்திருப்பது எனக்கு மிக உற்சாகமாக யிருக்கிறது" என்றார் ரோஸன்.

போலீஸ்காரர்கள் 6 நெ. வீட்டையும் 8 நெ. வீட்டையும் கதவை ஒரே சமயத்தில் தட்டினார்கள். இரு வீடுகளைச் சுற்றி பின்புறம் தோட்ட பக்கமும் போலீஸ் காவல் காத்துக் கொண்டிருப்பதால், அவ்விரு வீடுகளி லிருந்து ஒருவரும் வெளியேற இயலாது.

8 நெ. வீட்டில் கதவை தட்டியதற்கு பதிலில்லை. ஆனால் 6 நெ. வீட்டில் கொஞ்ச நேரம் தட்டியபின், 2-வது மெத்தையி லிருந்து "யார் கதவை தட்டுவது?" என்று சப்தம் வந்தது.

கீழிலிருந்து "மேரியா தானே" என்று ஷம்ஸ் கேட்டார்.

"ஆம் என்ன விஷயம். நீங்கள், ரோஸன் திரும்பி வந்து விட்டீர்களா? என்ன விஷயம்? உங்களுட னிருப்பவர்கள் யார்?" என்று மேரியா மெத்தையி லிருந்து எட்டிப் பார்த்துக் கேட்டாள்.

"நாங்கள் போலீஸ் உத்தியோகஸ்தர்கள். தயவு செய்து கீழே வந்து கதவை திறங்கள். நாங்கள் உள்வர வேண்டும்" என்று இன்ஸ்பெக்டர் தாமஸ் சொன்னார்.

"இந்நேரத்தில் இவ்வாறு வந்து, உள்வர வேண்டு மென்கிறீர்கள். என்னை தூக்கத்தி னின்றும் எழுப்பியதல்லாமல், என்னை பயப்படும்படி செய்கிறீர்கள்"

"உன் வீட்டில் தங்கி யிருப்பவர்களில் சிலரை பிடித்து சிறை படுத்த, நாங்கள் வாரண்டுடன் வந்துள்ளோம். ஆதலால் உடனே வந்து கதவை திற. இல்லாவிடில் கதவை உடைத்து உள் நுழைய ஏற்படும்" என்றார் தாமஸ்.

"ரோஸன் முன்பு சொன்னாரே அந்த இருவர்களா? அவர்கள் வெளியே போனவர்கள் இன்னும் வரவில்லை. எதற்கும் கதவை உடைக்க வேண்டாம். நான் வந்து திறக்கிறேன்" என்று சொல்லி மறைந்தாள்.

பிறகு லூஸி லூஸி என்று மேரியா பல தடவை கூப்பிடும் சப்தம் கேட்டது. சுமார் கால் மணி நேரத்திற்கு பிறகு மேரியா கதவை திறந்து, பயத்துடன் ஒதுங்கி நின்றாள். தாமஸ், ஷம்ஸ், சோடே ரோஸன், இன்னும் இரு போலீஸ் கான்ஸ்டேபில்கள் உள் நுழைந்தனர்.

"என் வீட்டிலா இவ்வாறு ஏற்பட வேண்டும். அக்கம்பக்கத்திலுள்ளவர்களுக் கெல்லாம் இவ்விஷயம் தெரிந்து விடும். எவ்வளவு அவமானம்! லூஸியையும் காணோம். அவள் எங்கு போனாளோ தெரியவில்லை" என்று நடுநடுக்கத்துடன் உளறினாள் மேரியா.

ஷம்ஸ் அவள் கையைப் பிடித்து "கவலை படாதே சிறிது நேரத்தில் எல்லாம் முடிந்து விடும்" என்று தைரியம் சொன்னார்.

6 நெ. வீட்டில் தங்கி யிருப்பவர்களை யெல்லாம் விசாரிக்க, எல்லாம் ஓய்வுக்கு தங்க வந்தவர்களாக சாதாரண ஆட்களாயிருந்தனர்.

ரோஸன் ஏதோ சொல்வதற்கு ஷம்ஸ் பக்கம் திரும்பினார். ஷம்ஸைக் காணோம். சிறிது நேரத்திற்குபின், படிக்கட்டின் கீழிருந்து வருவதைக் கவனித்தார். படிக்கட்டின் கீழ் ஒரு அல்மாரி யிருந்தது. அதிலிருந்து வருவதுபோல் தோன்றியது.

"பக்கத்து வீட்டையும் தேடவேண்டும். போகும் வழியின் கதவை திறந்துவிடும்" என்று தாமஸ் மேரியாவிடம் சொன்னார்.

"வாருங்கள் பக்கத்து வீட்டில் தான் ரோஸன் சொல்லிய இரண்டு திருடர்களும் தங்குவது. அவர்கள் வெளியே போயிருந்தார்கள். நான் தூங்கும்போது திரும்பி வந்திருக்கக் கூடும்" என்று மேரியா சொல்லி கதவைத் திறந்தாள்.

"நேராக பிரேஸர் அறைக்கு போங்கள். மேரியா! அவர்களுக்கு பிரபஸரின் அறையைக் காண்பித்துவிட்டு நீ ஒதுங்கிக் கொள். அபாயத்தில் மாட்டிக் கொள்ளாதே" என்றார் ஷம்ஸ்.

"என்ன! பிரபஸர் அறையில் அபாயமா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டே அப்படியே நின்றுவிட்டாள்.

"ஆம். பார்வைக்கு மிக சாந்த குணமுள்ள பிரபஸராக வேடம் தரித்த கொலையாளி. தான் அகப்பட்டுக் கொண்டோமென்று தெரிந் ததும் தனது கைத்துப்பாக்கியை உபயோகிக்கவும் கூடும்" என்று ஷம்ஸ் பதிலளித்தார்.

மேரியாவுடன் தாமஸ், ரோஸன், சோடே, நான்கு கான்ஸ்டேபிள் கள் மெத்தைக்குச் சென்றனர். மேரியா நடுங்கிக் கொண்டிருக்கும் தனது விரலால் பிரபஸர் சாண்டரின் அறையைக் காண்பித்தாள்.

அந்த அறையை நோக்கி போகும் போது, ஷம்ஸ் தங்களுட னில்லா திருப்பதை யறிந்த தாமஸ் "ஷம்ஸ் எங்கு போனூர்? அபாயத் திற்கு பயந்து நம்முடன் வரவில்லையா?" என்றூர்.

பிரபஸரின் அறையினுள் விளக்கு எரிவது கதவுகளின் இடைவழி யாக வெளிச்சம் தெரிந்தது. தாமஸ் மேரியாவை ஒதுங்குமாறு சொல்லி விட்டு, தனது துப்பாக்கியை கையில் தயாராக வைத்துக் கொண்டு கதவை கவனித்தார். பூட்டப்படவில்லை. திடீரென்று கதவைத் திறந்து "மாட்டிக் கொண்டீர்கள். கைகளை மேலே உயர்த்துங்கள்" என்று சப்த மிட்டார். அறையினுள் யாருமில்லை, காலியாக இருந்தது. "இங்கு யாரையும் காணேம். ஓடிவிட்டார்கள் போல் தெரிகிறது. ஆனல் வீட்டைவிட்டு வெளியில் போயிருக்க முடியாது. மற்ற அறை களை யெல்லாம் தேடுங்கள்" என்று சப்தமிட்டார்.

பிரபஸர், லூஸி, ஜான் இம்மூவரின் அறையிலும் மேஜைகளெல் லாம் அவசர அவசரமாக காலியாக்கப் பட்டது போல் தோன்றியது. வேண்டாத காகிதங்களை கொளுத்தியதாகவும் அறிகுறி யிருந்தது.

"ஓடிவிட்டார்கள். இவ்வீடுகளை வெளியிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த முட்டாள்கள் தூங்கினர்கள் போலும். எதற்கும் ஷம்ஸ் எங்கே? அவருக்கு இதைப் பற்றி ஏதாவது தெரியுமா?" என்று தாமஸ் சொல்லிக் கொண்டே திரும்பினர். அங்கு மேரியா முகத்தில் கைகுட்டை வைத்துக் கொண்டு, "எனக்கு அதிகமாக பணங்கொடுத்து தங்கி யிருந்தவர்களெல்லாம் ஓடிவிட்டார்களே!" என்று சொல்லிக் கொண்டே ஒரு மூலையில் அழுது கொண்டு நின்றூள். தாமஸ் அவளைப் பார்த்து மிக இரக்கப்பட்டார். "இச் சம்பவத்தை யறிந்தபின் இங்கு தங்க யார் வருவார்கள்? நான் வரிகளுக்கும், எலக்ட் ரிக் பில்களுக்கும் பணம் எவ்வாறு கட்டுவேன்" என்று தேம்பி தேம்பி அழுதாள்.

தாமஸ், மற்றவர்கள் பின்வர, அங்கிருந்து கீழிறங்கினர். அவசரத் தில் படிக்கட்டின் கீழ் எதிரே சிரித்துக் கொண்டு நிற்கும் ஷம்ஸை கவனிக்காமல் மோதினர். பிறகு கவனித்து "நீங்கள் இங்கு சிரித்துக்

கொண்டு நிற்கிறீர்களோ! மேலே என்ன நடந்தது தெரியுமா! யாரு மில்லை. எல்லோரும் ஓடி விட்டார்கள்'' என்று கோபத்துடன் சொன்னார்.

''நண்பரே கவலைப் படாதே. என்னுடன் வாருங்கள். ரோஸனுக்கு ஒரு துப்பாக்கி கொடுங்கள். அவர்கள் எங்கிருக்கிறார்களென்று காண்பிக்கிறேன். முன்பு, பக்கத்து வீட்டிலா, இந்த வீட்டிலாவென்று சந்தேக மிருந்தது'' என்றார் ஷம்ஸ்.

அங்கு நின்று கொண்டிருந்த மேரியா ஷம்ஸைப் பார்த்து ரோஸனை சுட்டி காண்பித்து ''ரோஸன்! இவர் உங்கள் தம்பியா? இவர் பெயர் ரோஸன் என்கிறீர்களே!'' என்று கேட்டாள்.

''கொஞ்ச நேரத்தில் நாங்களிருவரும் எவ்வாறு சகோதரர்களென்பது விளங்கும்'' என்று சொல்லியவாறு, மற்றவர்களை நோக்கி ''இவ் வழியாக வாருங்கள்'' என்றார்.

ஷம்ஸ் அங்குள்ள படிக்கட்டின் கீழுள்ள அல்மாரியைத் திறந்து அதனுள் வருமாறு சொன்னார். ஆச்சரியத்துடன் தாமஸ், சோடே. ரோஸன் அதற்குள் அங்கு வந்துள்ள பாட்கினும் அந்த அல்மாரியினுள் கஷ்டத்துடன் நுழைந்தனர்.

''அங்கு என்ன இருக்கிறது? ஒன்றுமில்லையே'' என்றாள் மேரியா, ஷம்ஸ் இதற்குள் அந்த அல்மாரினுள் ஓரத்தில் மரத்தினால் செய்யப்பட்ட பொத்தான்களைப் போலுள்ள இரண்டில் ஒன்றை தனது கை பெருவிரலினால் அழுத்தினார். உடனே அங்கு நின்றவர்கள், நிற்கும் தரை கீழே போவதை கவனித்தார்கள். ''இது, இது இவ்வீட்டின் கீழுள்ள அறைக்கு போகக்கூடிய எலக்ட்ரிக் லிப்ட். ஆனால் இதை பார்வைக்கு ஒரு பெரிய அலமாரியைப் போல் செய்யப்பட்டிருக்கிறது. ஸூஸி சோடேவினிடம் லிப்ட் என்றாளே, அது இது தான். தன்னை தூக்கு என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை'' என்றார் ஷம்ஸ்.

''இது மிக நூதனமானது'' என்றாள் மேரியா.

''ஓ! நீயும் எங்களுடன் வருகிறாயா. உனக்கு இந்த லிப்ட் யிருப்பது தெரியாதா?'' என்று ஷம்ஸ் கேட்டார்.

''எனக்கு தெரியாது. பிரபஸர் இங்கு இவ்வாறு செய்து வைத்திருக்கக்கூடும். பக்கத்து 6 நெ. வீட்டில் இவ்வாறில்லை'' என்றாள்.

''உனக்கு தெரியாமல் பிரபஸர் எப்படி செய்திருக்கக்கூடும்?''

''ஏன் செய்திருக்கக் கூடாது. இந்த வீடு அவருக்கு சொந்தமானது. அது உங்களுக்கு தெரியுமா? இவ்வீட்டில் அநேக வேலைக்காரர்களை வைத்துக் கொண்டிருப்பது மிக கஷ்டமா யிருக்கிறதென்று

அவர் இதை விற்பதாக தெரிவித்தார். என்னிடம் சேர்த்து வைத்த பணம் கொஞ்ச மிருந்ததால் இதை வாங்கினேன்.''

"ஓஹோ! நீ வாங்கிய பின் அவர் இங்கு குடிக்கூலிக்கு தங்கி வந்தாரோ?''

"ஆம்! தனது வீட்டிலேயே தங்கி யிருப்பது சௌகரியமாக யிருக்கிற தென்று எனக்குத் தெரிவித்து விட்டு, இங்கிருந்து கொலை திருடு முதலியவைகளை எனக்கு தெரியாமல் செய்து வந்திருப்பதாக தெரிகிறது. என்னையும் ஏமாற்றி விட்டாரே'' என்றாள்.

"மேரியா! கொஞ்சம் ஒதுங்கிக் கொள். நான் இந்த லிப்டை கீழ் கொண்டு போகப் போகிறேன். கீழே சண்டை போட வேண்டிய தேற்படலாம். எல்லோரும் துப்பாக்கிகளை தயாராய் வைத்துக் கொள் ளுங்கள்'' என்று ஷம்ஸ் சொல்லி, அந்த இரகசியமான பொத்தானை அமிழ்த்தினர். அந்த லிப்ட் கீழே இறங்கியது. கீழே லிப்ட் தரையில் தடுக்கப்பட்டு நின்றது. அங்கு விளக்கு வெளிச்சமு மிருந்தது. அச் சமயத்தில் கிளிக்! கிளிக்! இரண்டு தடவை துப்பாக்கி பிரயோகித்த சப்தம் கேட்டது. ஜான் ஒரு மேஜையின் பின் நின்று சுட்டதும் டொனல்ட் ஒரு சோபாவின் பின்னல் ஒளிந்து நின்று சுட்டதும் இரு சப்தம். அந்த இரு ரவைகளில் ஒன்று இன்ஸ்பெக்டர் பாட்கினின் கையிலும், மற்றொன்று லிப்டின் ஓரத்திலும் பட்டது. அதே விநாடி யில் இன்னொரு சப்தம் ஷம்ஸின் துப்பாக்கியி லிருந்து வந்தது. ஜான் அலறி விழுந்தான் மேஜையின் பின். இதை யறிந்த டொனல்ட், தான் மாத்திரம் சண்டை செய்வது ஒழுங்கல்ல வென்று தனது துப்பாக்கியை கீழே போட்டு விட்டு தனது இரு கைகளையும் தூக்கி நின்றான். அங்கு ஒரு அறை யிருந்தது. அதனுள் சோடே புகுந்து அங்குள்ள லூஸியை பிடித்தான். அவள் பிடிக்க விடாமல் காலால் உதைத்து வாயால் கடித் தாள். சோடே பல பலத்த திருடர்களை யெல்லாம் பிடித்திருந்தும், உதைத்து கடிக்கும் இப்பெண்ணை பிடிப்பதில் மிக கஷ்டப்பட்டான். அச்சயத்தில் தாமஸ் சோடேயின் உதவிக்குச் சென்று, லூஸியின் கையில் விலங்கிட்டார். பிறகு லூஸியையும் டொனல்டையும் ஜான் விழுந்து கிடக்கு மிடத்தில் நிற்பாட்டி கட்டி வைத்தார்கள். "ரோஸன்! என்னுடன் வா. உனக்கு வேண்டிய ஆளைத் தேடலாம்'' என்று ஷம்ஸ் சொல்லி லூஸி யிருந்த அறைக்குச் சென்று அங்கிருந்து இன்னொரு அறைக்குச் சென்றார்கள். ஷம்ஸின் பின் ரோஸனும் தாமஸும் சென்றனர். அவ்வறையில் ஒரு கட்டிலின் பேரில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் வாயில் துணி வைத்தும் இரு கை களை முதுகு பக்கமும் கட்டப்பட்டிருந்தது. அவளை பார்த்த ரோஸன் "ஒலிவா! ஒலிவா! என்று சப்த மிட்டவாறு ஓடி அவளை கட்டுகளுடன் தூக்கி சேர்த்து அணைத்தார்.

(தொடரும்.)

# முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்.

இது கல்விக்கடலாகிய இமாம் அப்துல்லாஹில் ஷாபிஈ றலியல்லாஹுன் அன்ஹுன் அவர்கள், அல்குத்துபுர் றப்பானீ வல்கவுதுஸ் ஸமதானீ ஸையிதினு முஹ்யித்தீன் அப்துல் காதிரில் ஜைலானீ றலியல்லாஹுன் அன்ஹுன் அவர்களுடைய காரண சரித்திரங்களில் நின்றும், கஷ்பு கறாமத்துகளில் நின்றும் அருமையும் அற்புதமான ஹிக்காயத்துகளாக அறபியில் எழுதியிருந்த கிதாபை, தமிழில் மொழி பெயர்த்து அரிய முறையில் வெளியிடப்பட்ட பெரிய நூலாகும். கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூ. 3

ஷை அறபுத் தமிழ் "அல்கன்ஜுல் அப்கம் பீ மனுகிபுல் கவ்துல் ஆஃலம்" விலை ரூ. 8

# நபிநாயகத்தின் திருவாக்கியம்

புதிய பதிப்பு! [ஹதீதுகள்] புதிய பதிப்பு!

(மிஷ்காத்தே ஷரீபின் மொழி பெயர்ப்பு)

(முதற்பாகம்)

இதில் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகள் அடங்கி இருக்கின்றன. முதற் பாகம் 930 ஹதீதுகள் அமைந்தது. டிம்மி 1-8 ஸைஸில் 288 பக்கங்கள் கொண்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 2-4-0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா

## அவர்களின் சரித்திரச் சுருக்கம்.

(அய்யம்பேட்டை, S. அப்துர் ரஜாக் ஸாஹிப்.)

### (1—வது பகுதி)

**ஹ**ஸ்ரத் நத்ஹர் அவ்லியா (தப்லே ஆலம் பாதுஷா) அவர்களின் தந்தைப் பெயர் அஹமத் கபீர்.

பண்டை காலத்தில் இப்பெரியார் ரூம், ஷாம் (ரோமாபுரி-சிரியா) ஆகிய நாடுகளை ஆண்டு வந்த கம்பீர அரசர். இவருக்குக் கீழ் எத்தனையோ சிற்றரசர்கள் அரசு புரிந்து இவருக்கு கப்பங் கட்டி வந்தார்கள்.

அஹமத் கபீர், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் 9-வது தலை முறையைச் சேர்ந்தவர். அவர் நீதி நியாயம் வழங்குவதிலும், ஈகை இரக்கம் பாராட்டுவதிலும் தலை சிறந்து விளங்கினர். இவரது பிரதம மந்திரிகள் இரண்டு பேர்கள். ஒருவரின் பெயர் ஷம்ஸ் கோயான், மற்றொருவரின் பெயர் ஷம்ஸ் பர்ரான்.

அஹ்மத் கபீர் அவர்களுக்கு குமாரர்கள் இருவர்; அதாவது முதல் இளவரசர் பெயர் சையத் நத்ஹர், இரண்டாவது இளவரசரின் பெயர் சையத் ஜலால். இரண்டு சகோதரர்களும் நல்ல குணசாலிகள்.

முதல் குமாரராகிய நத்ஹர் வலிக்கு ஏழாவது வயது வந்ததும் தந்தை அஹ்மத் கபீர் பாதுஷா காலமாகி விட்டார்.

அதனல் ஏழு வயதுள்ள இளவரசரான நத்ஹர் வலிக்கே பட்டஞ் சூட்டி, சிம்மாசனத்தில் அமர்த்தினர்கள். அழகிலும், நேர்மையதார்த்தத்திலும் இந்த இளவரசரிலும் தந்தையைப் போன்ற நல்லம்சங்கள் நிறைந்திருந்தன.

### ஹஸ்ரத் நத்ஹர் வலி அவர்களின் சொர்ப்பனம்

ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா அரசு புரிந்து வந்த காலத்தில் அவர்கள் வழக்கப்படி இரவில் படுத்திருந்த சமயம் ஓர் நாள் இரவு அறியதோர் சொற்பனங் கண்டார்கள். அந்த சொற்பனம் யாதெனில் :—

ஓர் வாலிபன் நரகத்தில் அவஸ்தைப் படுகிறுன்; கட்டிப் போட்டதைப் போன்ற தண்டனைகளில் அவன் சிக்குண்டு போய் அழு

187028.

கிறான்; அவன் கண்களி லிருந்து நீர் தாரை தாரையாக வடிந்து கொண்டிருக்கிறது. ஒருவித வேதனையாவது அவனை விட்டபாடில்லை.

அவனை அவ்வளவு பரிதாபகரமான நிலைமையில் சிக்குண்டு கிடப்பதைப் பார்த்த ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா அவர்கள் அவனிடஞ் சென்று "அப்பா நீ யார்? உன் பெயர் என்ன? உலகில், உன் வாழ்க்கையின் போது நீ ஒரு மிஸ்கீனு யிருந்து காலங் கழித்தாயா? அல்லது ஏதேனும் உயர்தா அந்தஸ்து படைத்திருந்தாயா? நீ எவ்வித பெருங் குற்றத்தை செய்ததற்காக உனக்கு இந்த அபார தண்டனை விதிக்கப் பட்டிருக்கிறது?'' எனக் கேட்டார்கள்.

அப்போது, அவன் ஹஸ்ரத் அவ்லியாவுக்கு பின் கண்ட பதிலளிக்கிறான்.

" ஆ! என்ன சொல்லட்டும்! நான் உலகின் கண் ஓர் அரும் பெரும் சக்ரவர்த்தியா யிருந்து செங்கோல் செலுத்தி வந்தவன். எனக்கு ஏராளமான சைனியங்கள் இருந்தன. ஆயிரக்கணக்கான வேலைக்காரர்கள் இருந்தார்கள். எண்ணிறந்த சிற்றரசர்கள் எனக்கு கப்பங்கட்டி வந்தார்கள்.

என் வேலைக்காரிகளைப் பற்றிச் சொல்லுங்கால், அவர்கள் சுவர்க்கக் கன்னிகளையும் தோற்கடிக்கு மளவில் அவ்வளவு அழகும் மேனியும் வாய்ந்திருந்தார்கள்.

நான் அல்லும் பகலும் சுகானுபவத்தில் மூழ்கிக் கிடந்தேன். என் பெயரின் கீர்த்தி ரூம், ஷாம் நாடுகளில் அனைத்தும் தலை சிறந்து விளங்கி வந்தது.

ஆனல், என்னில் இருந்து வந்த தீங்குகளோ வெனில்;

நான் நீதி நெறியை விட்டும் அகன்று கொடுங்கோன்மையை கடைப்பிடித்திருந்தேன்; என்பதற்காகவே தற்பொழுது இந்த நிலைமையில் சிக்குண்டு கிடக்கிறேன். நான் எனக்கு உரித்தான நேர்பாதையில் நீதியை கடைபிடித்து ஒழுகி யிருந்திருப்பேனாகில் இன்று கவலையற்ற சுவர்க்க வாசத்தை என்றைக்கும் அடைந்திருப்பேன். ''

மேற்கண்ட பதிலை செவி யுற்றதும் ஹஸ்ரத் அவ்லியாவின் பார்வை, மற்றோரிடத்திற்குச் சென்றது. இந்த இடத்தின் காட்சியானது முந்தின இடத்தின் காட்சிக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது. அதாவது, அவர் இப்போது பார்ப்பது இன்றியமையாததோர் பூங்காவனம். அதன் பசுமையும் நேர்த்தியும் மனதை பரவசப்படுத்தக் கூடியனவாயிருந்தன. அங்குள்ள ஆற்றுப்பாய்ச்சலென்ன! விசித்திர புஷ்பங்களென்ன! கனிகளென்ன! நானுவித பறவைகளென்ன! அதற்கு மத்தியில்

சிறந்ததோர் மாளிகை தன் நவீன ரத்தினங்களின் அமைப்புடன் ஜொலித்துக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் விவரிக்கிறார்கள்:-

"நான் அப்பூங்காவனத்தில் நுழைந்து, அந்த மாளிகையை யணுகி, கவனித்தபோது அங்குள்ளதோர் சிறந்த ஆசனத்தில் பெரியா ரொருவரை வீற்றிருக்கக் கண்டேன். அப்பெரியார் அல்லாஹ்உடைய இபாதத் (வணக்கத்) தில் ஆழ்ந்திருந்தார்.

சிறிது நேரத்திற்குள் அவர் என்னை தலையெடுத்துப்பார்த்தார். அப்போது நான் "தாங்கள் யார்? உலகில் தாங்கள் என்ன வேலைசெய்து கொண்டிருந்தீர்கள். தாங்கள் எந்த நற்கருமத்தைச் செய்ததற்காக தங்களுக்கு இன்று இவ்வளவு சுகவாசம் அடையப்பெற்றிருக்கிறது?" எனக்கேட்டேன்.

அதற்கு அப்பெரியார் எனக்கு பின்வருமாறு பதிலளித்தார்:- "ஹஸ்ரத்! உலகில் நான் மிக்க க்ஷீணதசையில் இருந்துவந்த ஓர் பகீர். ஆனால், எந்நேரமும், அல்லாஹ் உடைய ஜெபதபங்களிலேயே, என் வாழ்க்கைக் காலம் பூராவையும் கழித்தேன். அதன் பலனாகவே இப் போது, எனக்கு இவ்வளவு சுகவாசத்தை இணையற்ற தயாபரனாகிய அல்லாஹ் அருள் புரிந்துள்ளான்"

பெரியாருடைய பதில் முடிவுற்றவுடன் ஹஸ்ரத் நித்திரையும் தெளிந்தது.

ஆ! பாழ் உலகமே! உலக ஐசுவரியமே! உலக வாழ்க்கையே! நீ கடைசியாக யாவரையும் தன் பேராசையின் பொருட்டு அந்தகாரத்தில் ஆழ்த்தி நரக வேதனைக்கன்றோ என்னையும் ஆளாக்கி விடப்பார்க்கிறாய். செல்வ அந்தஸ்தே! உன் பௌஷ், இவ்வளவுதானா? என்றுகூறி வெறுப்படைந்தார்கள்.

ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியாவுக்கு சொப்பன உணர்ச்சியே எந்நேர மும் மனதை உறுத்திக்கொண்டிருந்தது. அப்பால் அரசியல் காரியங் கள் எவையும் அவர்களுக்கு பிடிக்கவில்லை. அதன்பேரில் ஒருநாள் அவர்கள், தமக்கு பதிலாக தம் தம்பிக்கு பட்டத்தை யளித்து, தம் அரண்மனையில் உள்ள மந்திரிகள் பிரமுகர்கள் ஆகியோர்களுக் கெதிரில் பட்டவிழா வைபவத்தில் பின் கண்டவாறு சொற்பொழி வொன்றை ஆற்றினார்கள்.

"என் தர்பாரைச் சேர்ந்த மந்திரிமார்களே! ஏனைய கனதனவான் களே! நான் இம்மாதிரியான (தம் சொப்பனத்தை விவரித்து விட்டு) சொப்பனத்தைக்கண்டதி லிருந்து என் மனம் ஆட்சியை வெறுத்து விட்டதன் காரணமாகவே, நான், என் தம்பி சையத் ஜலாலுக்கு தங்களெல்லோருக்கு முன்னிலையில் பட்டம் சூட்டலானேன்.

எனவே தாங்களெல்லோரும், இனி மேல், அவரது அரசியல் கட்டளைகளுக்குட்பட்டு முழு விசுவாசத்துடன், ஒழுங்காய் நடந்து கொள்ளுமாறு அனைவர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன்''

அடுத்தபடியாக ஹஸ்ரத் அவ்லியா தம் சகோதரருக்கும் சொல்ல வேண்டிய விஷயங்களைச் சொல்லி யாவற்றையும் ஜாக்கிரதையாய் கவனித்துக் கொள்ளவேண்டுமென உபதேசித்தபின் மேற்கொண்டு சொல்லுகிறார்கள்:

''இன்ஷா அல்லாஹ், நான், நேரே, கஅபாவுக்குப்போய், ஹஜ்ஜு செய்து முடித்தானதும் தக்க ஷய்க்கை (குருவை) தேடிச்சென்று முரீது வாங்க தீர்மானித்துள்ளேன்.''

ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா அவர்கள் குருவைத் தேடிச் சென்ற போது அவர்களின் வயது 22. பட்டத்தைத் துறந்து அவர்கள் யாத்திரைக்குச் செல்வதைக் கேட்டதும் அவர்களது தோழர்களும் தர்பாரிகளும் வழியனுப்பும் உபசாரத்திற்காக திரள் திரளாக வந்து கூடி விட்டார்கள்.

சுமார் 15 வருஷகாலம்வரையில் குடி ஜனங்களை மிக்க திருப்திகரமான முறையில் ஆட்சி புரிந்து இப்போது அவர்களை விட்டுப் பிரியும் துக்கத்தை பாலர் முதல் விருத்தாப்பியர் வரையில் அடையலாயினர்.

பாதுஷாவுடன் ஊரின் லக்ஷணமும் போய்விட்டதென்றும் பலர் பலவாறு சொல்லி அழுதார்கள். ஹஸ்ரத் அவ்லியா, அவர்களுக்கெல்லாம் ஆறுதலளித்து, இன்ஷாஅல்லா தாம் மீண்டும் வந்து அவர்களைப் பார்ப்பதாக தைரியமூட்டி புறப்பட்டுச்சென்றார்கள். அவர்கள் புறப்பட்ட மாதம் ஸபர் மாதமாக இருந்ததாயினும் குடிஜனங்களின் துக்கத்தை யனுசரித்து அது அவர்களுக்காக துக்கங் கொண்ட முஹர்ரம் மாதத்திற் கொப்பாயிருந்தது.

ஹஸ்ரத் தம்முடன் ஜனங்களின் வற்புறுத்தலின்பேரில் ஒருவார உணவைமட்டும் எடுத்துக் கொண்டார்கள்.

ஷய்க் (குரு) மோகத்தில் ஆழ்ந்துள்ள அவர்களுக்கு பசி, தாகம் நித்திரை முதலிய யாதொரு சௌகரியமும் இச்சமயம் வேண்டியிருக்கவில்லை. தாம் எந்த ஊருக்கு எவ்வழியே போய்ச் சேரவேண்டுமென்பதும் அவர்களுக்கே தெரியாதிருந்தது. அவர்களது 2 மந்திரிகளும் இன்னும் சிலரும் கூடச்சென்றார்கள். சதா சிம்மாசனத்தில் வீற்றிருந்து வெல்வெட் பட்டின்மேல் கால்வைத்து தர்பார் ஹாலுக்குள் நடந்துவந்த பாதுஷாவானவர் இதுசமயம் காடுகளை வெற்றுக் கால்களுடன் கடந்துகொண்டு கல் காடு, முள் செடி ஆகியவை இன்ன

தெனத் தெரியாமல் இரவும் பகலும் ஓயாது நடந்தலேந்து கொண்டிருந்தார்.

அவர், தம்முடன் எடுத்துவந்த ஒரு வாரத்திற்கான உணவும் முடிந்தது. காட்டிலுள்ள கிழங்கு, செடிகளின் தழை இவையே அவர்களின் வேளாவேளைக்குரிய உணவாக உபயோகப்பட்டுவந்தன. சில சமயங்களில் வெற்று ஜலத்தை குடித்தும் சில சமயம் பகல் முழுவதும் நோன்பு நோர்த்தவண்ணமும் பியயாணத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

கொடிய வெயிலின் பொருட்டு சூடான மணலினுல் அவர்களின் உள்ளங்கால்கள் கொப்பளித்து விட்டன.

## முர்ஷித் (குரு) வாய்த்தல்

கொடிய கஷ்டநிஷ்டூரங்களுக்கும் பின்னர் ஹஸ்ரத் அவ்லியா அவர்களுக்கு சமீபத்தில் ஏதோ ஓர் ஊர் இருப்பதாகத் தெரிந்தது. பெரும் மகிழ்ச்சியுடன் அதன் திசையில் விரைந்து சென்றுர்கள். ஊரையடைந்ததும் அங்குள்ளவர்களிடத்தில் அந்த ஊரின் பெயரை வினவியபோது அதன் பெயர் 'ஹுர் முஸ்' எனத்தெரிந்தது.

அப்புனித ஸ்தலம், மகிமை வாய்ந்ததோர் பிரபல மஹானின் இருப்பிடமாக விளங்கி வருகிறதென்றும் அம்மஹானின் திருநாமம் பாபாசையத் இப்ராஹீம் (பட்டபெயர் ஷய்குஸ்ஸமான்) (அக்காலத்திய பெரியார்) என்றும் ஜனங்கள் வாயலாய் ஹஸ்ரத் அவர்களுக்குத் தெரிந்தது. அவ்வமயமே முர்ஷீத் அவர்களின் மகத்தான குணதிசயங்களையும் செவியுற்றுர்கள். நிற்க அந்த ஷய்க் அவர்களின் அன்னதான நிலேயத்தில் நாள் ஒன்றுக்கு ஆயிரம் பவுன்கள் செலவு ஏற்பட்டிருந்தது. ஆயினும் அதற்காக ஷய்க் அவர்கள் பிறரிடத்தில் ஒரு பைசாகூட கைநீட்டி வாங்கினது கிடையாது.

பின்னர் அவர்களுக்கு அப்பணம் எங்கிருந்து வரும் எனக் கேட்டால், அவர்கள் படுக்கையின் கீழே காலேயானதும் ஆயிரம் பவுன்கள் மறைவான விதத்தில் வைக்கப்பட்டுவந்தன, என்றும் பிரஸ்தாமிருந்து வந்தது.

ஹஸ்ரத் ஷய்க் அவர்களுடன் கலந்தர் வமிசத்து பகீர்கள் சுமார் 2 ஆயிரம்பேர் கூடியிருப்பார்கள். அதனுல் அவர்களுக்கான சாப்பாட்டுச் செலவுக்கு அவ்வளவு தொகை வேண்டியிருந்தது.

## ஷய்க் அவர்களது விசுவாச சோதனே.

"ஹுர் முஸ்" ஊரில் உள்ள ஷய்க் அவர்கள் வாசஸ்தலத்தில் பெரியதோர் வாயகன்ற இரும்புப் பாத்திரத்தில் நிறையவும் தண்ணீர்

ஊற்றி அத்தண்ணீர் பெரியதோர் அடுப்பின்மேல் சதாக் கொதித்துக் கொண்டிருக்கும். நிமிஷநேரத்திற் கேனும் அடுப்புக்கு ஓய்வு ஓய்ச்சல் இல்லாதிருந்தது.

அதிலுள்ள ஒரு துளி ஜலம் திரேகத்தில் தப்பித்தவறிபட்டு விடுமேயாகில் நெருப்பைப்போலவே சுட்டு கொப்பளத்தை யுண்டாக்கக் கூடிய மகத்தான சூட்டை யடைந்திருந்தது.

அந்த ஹஸ்ரத் ஷய்க் அவர்களிடத்திற்குச் சென்று யாரேனும் முரீதி வாங்கவேண்டுமென வேண்டினுல் ஷய்க் அவர்கள் அவ்வபாண்ட பாத்திரத்திலுள்ள வெந்நீரில் அவரை உடனடியாகவே முக்களித்து எழுந்திருக்குமாறு உத்தரவு செய்து வந்தார்கள்.

அந்த தண்ணீர் அளவிறந்த சூட்டின் காரணமாக கை தொடவும் அபாயகரமாயிருந்து வந்தபடியால் தூரத்திலிருந்து அதை கண்ணுற்றதும் அநேகர் பெரும் அச்சத்துடன் திரும்பிப் போய்விடுவார்கள்.

சிலர் அப்பாத்திரத்தை யணுகியும் தயங்கிவிடுவார்கள். ஷய்க் உடைய உண்மை விசுவாசத்தைக் கொண்டுள்ள மிக்க சிலபேர்களே எப்படியானுலும் ஆகட்டும் எனச்சொல்லி ஷய்க் சொன்னதும் அதில் குதித்துவிடுவார்கள்.

இது இப்படியிருக்கையில் ஹஸ்ரத் அவ்லியா அவர்கள் ஷய்க் சமுகத்தை அடைவதற்கு முன்னமேயே 'ஜவ்லக் நாட்டின் அரசரான சையத் அலி என்பவரும் ஷய்க் அவர்களிடத்தில் முரீதி வாங்கி அல்லும் பகலும் ஷய்க் சந்நிதானத்திலேயே அவர்களுக்கு தொண்டு புரிந்து வந்தார்.

இச்சந்தர்ப்பத்தில் நத்ஹர் அவ்லியாவும் அந்த ஊரை யடைந்தவுடன், யாரோ ரூம் தேசத்து பாதுஷா ஒருவர் ஷய்க் அவர்களிடத்தில் முரீதி வாங்க வந்திருக்கிறுர் என்ற செய்தி ஹுர் முஸ் நகரடங்கலும் பரவியது. ஹஸ்ரத் ஷய்க் அவர்கள் தம் பரம சக்தியைக் கொண்டு புதிதாய் வந்துள்ள பாதுஷாவின் குணுதிசயங்களைப் பற்றி தம் முரீதாகிய ஸையத் அலிக்கு எடுத்துக்கூறினுர்கள். அவர்கள் கூறியதன் சாராம்சம் யாதெனில்:—

சையத் அலியே! உம்மைக்கொண்டும் இனி என்னிடம் முரீதாக வந்திருக்கும் நத்ஹர் பாதுஷாவைக்கொண்டுமே எனக்கு பிரதானக் கீர்த்தி ஏற்படக்கூடும். அவர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் 9வது வமிசப்பாரம்பரையைச் சேர்ந்தவர். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் வீரதீரம் வமிச பரம்பரையின் தொடர்பி லிருந்து இவரது இரத்தத்திலும் ஓடிக் கொண்டிருக்கிறது.

இவர் பேய், பூதங்களை எதிர்த்து அவர்களை தம் வாளுக்கிரையாக்கியும் அவர்கள் வாயலாக பரிசுத்த கலிமாவை ஓத வைக்கவும் திறமை வாய்ந்தவர்.''

ஷய்க் அவர்கள் தங்கள் வாயலாய் சையத் அலி யவர்களுக்கு விஷயங்களைச் சொல்லி முடிப்பதற்குள் ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியாவும் ஷய்க் சமுகத்தில் ஆஜராகி விட்டார்கள்.

விளக்குப் பூச்சி விளக்கு வெளிச்சத்தைக் கண்டதும் எவ்வாறு தன் உயிரை லஹியம் செய்யாமல் அதில் விழுந்து மடிந்து போகிறதோ அதே மாதிரியாகத் தான் இப்போது இவர்களின் நிலைமையும் இருந்து வந்தது.

ஆனால், ஷய்க் அவர்கள் அவரது ஆழ்ந்த மோக நிலையைக் கண்டதும் தூரத்தி லிருந்தே அவரை தடுத்தும் நிற்க வைத்தும் ஒழுங்கான அளவில் அவரது மரியாதைகளை ஏற்று, தம் மார்புடன் தழுவி அவரது நெற்றியை முத்தமிட்டுச் சொன்னார்கள் :—

“ தம்பி நத்ஹர் பாதுஷாவே, நீர் எத்தகைய உயரிய உலக அந்தஸ்தை வாய்த்திருந்தவர். அரசாங்க பரிபாலனத்தையும் உதறித் தள்ளி விட்டு இந்த இளம் பிராயத்தில் இப்பேர்ப்பட்ட பிரயாணக் கஷ்டங்களையும் சகித்து இன்று என்னண்டை வந்திருக்கிறீர்.

என் கண்மணியே ! நான் உன் மனச்சுத்தியை பெரிதும் பாராட்டுகிறேன். அல்லா ஜல்லஷானுஹு தஆலா உமக்கு இதற்குரிய நல்ல பலனை தந்தருள்வான்'' இவ்வாறு ஷய்க் அவர் மொழிந்தருளிய பின்னர் “ ஜவ்லக் ” என்பவரை நோக்கி “நீர் இவரை அழைத்துச் சென்று உம்முடைய படுக்கைக் கருகில் இவருக்காக இடத்தை அமைத்துக் கொடுப்பதுடன் இவர்களுடன் வந்திருப்பவர்களுக்காகவும் நல்ல விடத்தை காலிப்படுத்திக் கொடும்'' என்றார்கள்.

## ஹஸ்ரத் நத்ஹர் பாதுஷா ஷய்க் இடத்தில் முரீது வாங்குதல்

ஹஸ்ரத் அவ்லியா ஷய்க் சமுகத்தில் போய்ச் சேர்ந்ததற்கு அடுத்த நாள் வியாழக்கிழமை; அது முபாரக்கான நாள் (பரிசுத்த தினம்) என்பதை பாராட்டி அன்று காலையிலேயே ஹஸ்ரத் ஷய்க் அவர்கள் முரீது கொடுப்பதற்கான சகல வஸ்துக்களையும் விலை கொடுத்து வாங்கி தயாராக வைக்குமாறு ஷாஜவ்லகிற்கு ஆக்ஞாபித்தார்கள். அவ்வாறே, புஷ்பம், சந்தனம், பன்னீர், அத்தர், மிட்டாய், தாம்பூலம் ஆகியவை யாவும் கொண்டு வந்து தட்டுகளில் வைக்கப்பட்டன.

நத்ஹர் பாதுஷா இன்று முரீது ஆகப் போகிறார் என்ற செய்தியும் பகீர்களுக்கிடை பிரஸ்தாபிக்கப் பட்டது. ஷய்க் முரீது செய்யப் போவதற்கு சற்று முன்னர், நத்ஹர் பாதுஷாவை தம் அண்டையில் கூப்பிட்டு, அவர் தலை மேல், தம் வலது கையை வைத்து "நத்ஹர் பாவாவே! நீர் கொதித்துக் கொண்டிருக்கும் அந்த அண்டாவில் உள்ள வெந்நீரில் செவ்வனே முக்களித்து குளித்து வாரும்" என்று சொன்ன நிமிஷத்திலேயே நத்ஹர் பாதுஷா, ஓட்டமாக ஓடி வந்து அந்த பயங்கரமான ஜலத்தில் ஓ! எனது வமிசப் பிதாவான அலியே என்று சொல்லி ஒரே பாய்ச்சல் பாய்ந்தார்கள். நத்ஹர் அவர்களின் தூய்மையான துணிச்சலைக் கண்ணுற்ற அங்குள்ள பலரும் "இந்த வாலிபர் எதிர் காலத்தில் ஓர் உத்தம அவ்லியாவாக விளங்குவார்" யென தங்களுக் கிடையே பேசிக் கொண்டார்கள்.

ஷய்க் அவர்களின் உத்தரவுக் கேற்ப, நத்ஹர் பாதுஷா அந்த வெந்நீரில் குளித்து முடிந்ததும் ஷய்க் அவர்களிடம் போய் முரீதியின் பெரும் பாக்கியத்தை அடைந்தார்கள்.

அப்பால் அங்கு கூடி யிருந்த எல்லோருக்கும் சந்தனம் புஷ்பம் மாரிய பின்னர் மிட்டாயும் பகிர்ந்தார்கள்.

பகீர்க ளெல்லோரும் வைபவத்திற்குப் பின் ஷய்க் அவர்களுக்கு மரியாதை செலுத்தி விட்டு தத்தம் படுக்கைக்குச் சென்றார்கள்.

ஷய்க் அவர்கள் நத்ஹர் பாதுஷாவுக்கு தம் முரீதுக்கான பரம ரகசிய போதனைகளை யாவும் புகட்டி, இன்று முதல் அவருக்கு நத்ஹர் பாதுஷாவுக்கு பதிலாக நத்ஹர் அவ்லியா என்று சொல்லும் படியான அந்தஸ்தை அருள் புரிந்தார்கள்.

சிஷ்யர், நத்ஹர் அவ்லியாவுக்கு ஷய்க் அவர்களின் உண்மையான சேவை இது முதல் கிடைக்கப்பட்டு வந்தது.

(தொடரும்.)

187028

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# தீனுல் இஸ்லாம்

## ஷாபி மதுஹபுக்குரியது

இதில் இஸ்லாம் மார்க்கம், ஒன்றும் கலிமா, கலிமா ஷஹா தத்து, தொழுகையில் ஓதவேண்டிய ஓதல்கள், தக்பீற், தக்பீற் கட்டியபின் ஓதும் துஆ, ஸூறத்து பாத்திஹா, ஸூறத்து இக்லாஸ், ருகூவுடைய தஸ்பீஹ். தஸ்பீஃ, தஹ்மீது, ஸுஜூ துடைய தஸ்பீஹ், நடு இருப்பில் ஓதும் துஆ, முந்தின அத்த ஹிய்யாத்து, பிந்தின அத்தஹிய்யாத்து, ஸலாம் சொல்லல், ஸுப்ஹ் தொழுகையில் ஓதும் குனூத், தொழுகைகளுடைய வக்துகளும் அதில் தொழ வேண்டிய தொழுகைகளும், ஒலூ செய்யும் ஒழுங்குகள், ஒலூ செய்தபின் ஓதும் துஆ, பாங் குடைய கலிமாக்கள், ஸுப்ஹுடைய பாங்கு, பாங்கு இகா மத்தை கேட்பவர்கள் பிரதி மொழி, இகாமத்து, பாங்கு இகா மத்துடைய துஆ, ஐந்து வக்துகளின் பர்லு, ஸுன்னத்து தொழுகையின் தக்பீர், ஜும்ஆ தொழுகையின் பர்லு, ஸுன் னத்து தக்பீர்கள், நோன்பு பெருநாள் தொழுகை தக்பீற், ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை தக்பீற், தருவீஹ் தொழுகை தக்பீற், தொழவேண்டிய ஒழுங்குகள், தொழுது முடிந்தபின் ஓதும் இஸ்திக்பாரும், அவுறாதும் துஆவும், தொழுது முடிந்த பின் ஓதும் துஆ, தொழுகை நிறைவேறுகிறதற்கு வேண்டுமான ஷர்த்துகள், தொழுகையில் பேணவேண்டிய அம்சங்கள், ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

இந்த புஸ்தகத்தில் அரபு வாக்கியங்களை முதலில் அரபு எழுத்துக்களிலும் பின்பு அவைகளுக்கு தமிழிலும் போடப் பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமானவர்களுக்கு இது அவசியமான புஸ்தகம். இதன் விலை அணா. 6

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

## தஸ்கிறதுல் அவ்லியா

(இதில் பதினொரு அவுலியாக்களுடைய சரித்திரங்க ளடங்கி யிருக்கின்றன)

1-வது ஹஸரத் இமாம் ஜஃபரிஸ்ஸாதிக் றஹிமஹுல்லா, 2-வது ஹஸரத் உவைஸுல் கறனீ றஹிமஹுல்லா 3-வது ஹஸரத் ஹஸன் பஸரி றஹிமஹுல்லா, 4-வது ஹஸரத் மாலிக்கிப்னு தீனார் றஹிமஹுல்லா, 5-வது ஹஸரத் முஹம்மது வாஸிஃ றஹிமஹுல்லா, 6-வது ஹஸரத் ஹபீபு அஜமி றஹிமஹுல்லா, 7-வது ஹஸரத் அபூஹாதிம் பகிர் றஹிமஹுல்லா, 8-வது ஹஸரத் அஹமதுப்னு குலாம் றஹிமஹுல்லா, 9-வது ஹஸரத் ருபியதுல் அதவிய்யா றஹிமஹுல்லா, 10-வது ஹஸரத் புலைலுப்னு இயால் றஹிமஹுல்லா, 11-வது ஹஸரத் இப்றாஹீமுப்னு அத்ஹம் றஹிமஹுல்லா ஆக இப்பதினொரு நாதாக்களுடைய சரித்திரங்கள் அடங்கிய நூல். கலிகோ பைண்டு விலை ரூ. 2—2—0

ஷை அறபுத்தமிழ் 1, 2, 3-பாகங்கள் ஒவ்வொரு பாகமும் விலை ரூ. 2—2—0

## ஹலரத் காஜா ஜுனைதுல் பக்தாதி

றலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஜீவிய சரித்திரம்.

அரும்பெரும் மெஞ்ஞான தத்துவங்களான தஸவ்வுப் தக்வா இபாதத்து, உபவாசம் என்ற இற்பானுடைய துறையில் துலங்கி விளங்கும் ஹஸ்ரத் காஜா ஜுனைதுல் பக்தாதி றலியல்லாஹு அன் ஹு அவர்களின் அரிய ஜீவிய சரித்திரத்தைப் பார்க்க நம்நேயர்களில் அனைவரும் அளவிறந்த ஊக்கங் கொண்டிருக்கலாம் என்பதை சொல்லத் தேவையில்லை. ஹஸரத் அவர்களின் வஸ்தாதாகிய ஹஸ்ரத் சரீயிஸ்ஸிக்தி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் அரிய மெஞ்ஞான உபதேசங்களை ஏற்று நடந்தொழுகிய ஹஸ்ரத் காஜாஜுனைத் அவர்கள் உலக மெஞ்ஞானிகளுக்கோர் வழிகாட்டிய தீபத்தை போலாவார். தமது திவ்விய உபதேசங்களினால் அந்தகாரத்தை தவிர்த்து மெஞ்ஞான ஒளி வீசசெய்திருக்கிறார். தஸவ்வுபின் அபேக்ஷகர்கள் இவ்வரிய நூலைவாங்கி வாசித்து அம்மஹானின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடத்தல் அவசியம்.

கிளேஸ் காகிதம் விலை ரூ. 1—4—0

---

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, லைறோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.